



பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 16 சனிக்கிழமை 01.08.2020 கதிர் 265


### இது ரகசியம் அல்ல!

நாளை நள்ளிரவோடு தேர்தல் பிரசாரம் முடிவுக்கு வருகின்றது.

ஊடகங்கள் – குறிப்பாக அச்சு ஊடகங்கள் – நாளை கடைசி நேரத்தில் குசும்பு வேலைகள் செய்யக் கூடும்.

அப்படி ஒரு சதித் திட்டம் தமக்கு எதிராகக் கட்ட பக்கம்02

நியாயமான தீர்வை வென்றெடுக்க

## கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் பலமான ஆணை தரவேண்டும்

திருமலையில் சம்பந்தன் கோரிக்கை

திருமலை, ஓக. 01

நியாயமான ஓர் அரசியல் தீர்வை வென்றெடுக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தமிழ் பக்கம் 02

## கறுப்பு உடையணிந்த ராணுவம் விக்னேஸ்வரனுக்கு இடையூறு!

உடன் நடவடிக்கை எடுக்குமாறு அவர் ஜனாதிபதிக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஓக.01

முழுக்கறுப்புச் சீருடை அணிந்த இராணுவத்தினர் தனது தேர்தல் பரப்புரையைக் குழப்பும் வகையிலும் தன்னை அச்சுறுத்தும் வகையிலும் நடந்துகொண்டனர் என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான பக்கம்02

## சமஷ்டியை சம்பந்தன் தூக்கி எறியவேண்டும்!

பிரதமர் மஹிந்த ஆவேசம்

கொழும்பு, ஓக. 01

நாட்டைப் பிளவுபடுத்தும் சமஷ்டி வழியிலான தீர்வைத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கேட்கின்றார்.

முதலில் அவர் சமஷ்டியைத் தூக்கி வீசிவிட்டு பொதுவான தீர்வைக் கேட்க வேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி பக்கம் 02

## அரச வேட்பாளர் அடாவடிக்கு யாழ்.அதிகாரிகளும் உடந்தை!


### தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் குற்றச்சாட்டு

(க.கதிரவன்)

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 01

**யாழ்.தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் பெரும்பான்மைக் கட்சி ஒன்றின் வேட்பாளருக்குச் சார்பாக அரச அதிகாரிகளும் செயற்பட்டு வருகின்றமை கவலையளிப்பதாக தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்டத்தில் அரசியல் கட்சி ஒன்றின் மீறல்கள் தொடர்வதாகவும் அதனைத் தன்னாலும் பக்கம் 02



## ராஜபக்ஷக்களுடன் யாருக்கு ‘டீல்’?

நிரூபித்துக் காட்ட விக்கிக்கு சரா சவால்



ராஜபக்ஷக்களுடன் கடந்த காலங்களில் ‘டீல்’ பேசியவர்களையும், பின் கதவால் ஒப்பந்தம் செய்தவர்களையும் தன்னுடன் கூட வைத்துக் கொண்டு, அவர்களை வேட்பாளர்களாகவும் களமிறக்கி விட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி இடையே ஒப்பந்தம் இருப்பதாக வாய்கூசாமல் பொய் சொல்கின்றார் முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வ பக்கம் 02















## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விழலாம் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் சந்தேகிக்கின்றார்.

சில ஊடக வட்டாரங்களில் அப்படி சதித் திட்டங்கள் தயாராகின்றமை குறித்து நானும் கேள்விப்பட்டேன்.

அரசியல் நோக்கங்களை எட்டுவதற்காக சில தரப்புகள் அப்படி நடக்கக் கூடும்.

குற்றம் சுமத்தப்படுகின்றவர் தமது தன்னிலை விளக்கத்தை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பளிக்காத விதத்தில் இப்படிக் கடைசி நேரத்தில் ஒரு தலைப்பட்சமாக – ஒரு பக்கமாக – அரசியல் ரீதியாகத் தாக்குவது கட்சிப் பத்திரிகைகளுக்கும், கட்சி நாளேடுகளுக்கும் சரியாக இருக்கலாம். ஆனால் நடுநிலைத் தினசரி என்று தன்னைப் பீற்றிக் கொள்ளும் தரப்புகளுக்குப் பொருத்தமானது அல்ல.

பார்ப்போம். என்ன நடக்கின்றது என்று.

★ ★ ★

தமிழ் அரசியல் கட்சிகள் இடையே கடந்த சில வாரங்களாகச் சூடு பறக்கும் பேசு பொருளாக இருந்தது அரசியல் தலைவர்களிடையேயான நேரடி விவாதம் பற்றிய சர்ச்சைதான்.

ஒருவர் சவால் விட, மற்றொருவர் ஏற்க, இன்னொருவர் நைஸாகக் கழற.. என்று அவ்விவகாரம் சூடு பிடித்தது.

ஆனால் வெறுமனே அரசியல் தலைவர்களின் ஆரவாரத்துடன் விடயம் அடங்கி விட்டது. சுமந்திரனும், சிறீகாந்தாவும் தயார் என்றனர். கஜேந்திர குமார், தமக்கு சுமந்திரன் ஜாரி இல்லை என்று கூறி நைஸாக ஜாகா வாங்கினார்.

கிடைத்த அருமையான வாய்ப்பைப் பயன்படுத்தாமல் நம் உள்ளூர் தொலைக்காட்சி சேவை தவறவிட்டு விட்டது.

நாளையுடன் தேர்தல் பிரசாரத் திருவிழா முடிந்து விடும்.

தேர்தலுக்குப் பின்னரும் ஆறுதலாக விவாதம் நடத்தலாம் – தலைவர்கள் தயார் என்றால்.

★ ★ ★

கொழும்பிலிருந்து ஓர் ஊடகப் பிரதிநிதி நேற்று தேர்தல் ஆணையாளர்களில் ஒருவரான பேராசிரியர் ரட்ணஜீவன் கூலுடன் தொடர்பு கொண்டார்.

ஏற்கனவே வடக்கில் அரச சார்பு வேட்பாளர் ஒருவரினால் தேர்தல் விதிமுறைகள் மோசமாக மீறப்படுகின்றமை தொடர்பில் தினசரி குவியும் முறைப்பாடுகளால் கொதித்துப் போயிருந்த அவரிடம் யாழ். நிலைமைகள் குறித்துக் கேட்டார் அந்த ஊடகவியலாளர்.

கொதிப்பில் இருந்த பேராசிரியர் ரட்ணஜீவன் கூல், *“தேர்தல் ஆணைக்குழுவைக் கலைத்து விட்டு அதனை அங்கஜன் குழுவிடம் கையளித்து விட்டுச் செல்லாம்!”* – என்று விரக்தியிலும் எரிச்சலிலும் பதில் சொன்னாராம்.

வந்த கோபத்தில் ஆணையாளர் பணியை இராஜினாமாச் செய்து விட்டு போகும் எண்ணத்திலும் கூட இருந்தார் அவர்.

அப்படித் திடீரெனச் செய்யக் கூடியவர் அவர். அப்படி நடந்தால் புதிய ஆணையரை விரைந்து அவசரமாக அரசமைப்புக் கவுன்ஸில் கூடி நியமிக்க வேண்டியிருக்கும். அதுவரை தேர்தல் தாமதமானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அப்படி நடந்தால் மீண்டும் தேர்தல் தாமதமானமைக்கு முழுப் பழியும் அங்கஜன் மீது விழுவதோடு, அவரின் தேர்தல் கால அட்டகாசங்கள் முழு இலங்கையினதும் பேசு பொருளாகி, தேசிய மட்டத்தில் விவகாரம் வலம் வரும்.

எது,எப்படி என்றாலும் இன்றும் மூன்று மாதத்தில் இந்த ஆணையாளர் பதவியை இழக்கப் போகின்றவர் அவர். மூன்று மாதம் முந்தியே இழந்து, சில உண்மைகளை அம்பலப்படுத்தலாம் என்றும் அவர் சிந்திக்க் கூடியவர்.

சம்பந்தப்பட்டவர்கள் அவர் விடயத்தைப் பொறுப்போடு கையாள்வது நல்லது.

–மின்னல்– .

## ராஜபக்ஷக்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரன். ராஜபக்ஷக்களுடன் கூட்டமைப்பு எந்த உறவுமில்லை என்பதைத் துணிந்து சொல்வதுடன், குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் முன்னாள் நீதியரசர் மக்கள் என்ற நீதிபதிகள் முன்பாக முடிந்தால் ஆதாரங்களை முன்வைக்கட்டும் என்று சவால் விடுகின்றேன். ஆனால், ராஜபக்ஷக்களுடன், அவருக்கும் அவர் கூட இருப்பவர்களுக்கும் ‘டீல்’ இருக்கின்றது என்பதை என்னால் ஆதாரங்களுடன் நிரூபிக்க முடியும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்ட வேட்பாளருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

மட்டுவில் பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்களைத் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றார். அவரது குற்றச்சாட்டுக்கள் மக்கள் மத்தியில் தாக்கம் செலுத்தவில்லை. ஆனாலும் அவரோ சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் போன்று ஏதாவது பொய்யையும் புரட்டையும் சொல்லி எப்பாடுபட்டாவது இந்தத் தேர்தலில் வெற்றி பெறத் துடிக்கின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீதான ஆதரவுத் தளத்தைச் சிதைப்பதற்காக அவர் கடைசியாக எடுத்துள்ள ஆயுதம் தான், பொதுஜன முன்னணியுடன் கூட்டமைப்புக்கு இரகசிய ஒப்பந்தம் இருக்கின்றது என்ற கருத்துரை. அவரது மனச்சாட்சிக்கே தெரியும், தான் சொல்வது பச்சைப் பொய் என்று. இருப்பினும் அரசியல் ஆதாயத்துக்காக அதனை அவிழ்த்து விடுகின்றார்.

விக்னேஸ்வரனின் அணியில் இருந்து கொண்டு இந்தத் தேர்தலில் போட்டியிடுபவர்கள்தான் ராஜபக்ஷக்களுடன் ‘டீல்’ வைத்திருக்கின்றார்கள். அதனைத் திசை திருப்ப இந்தப் பழியை கூட்டமைப்பு மீது போட்டாரோ நான் அறியேன்.

மஹிந்த ராஜபக்ஷ அமைச்சராக இருந்த காலத்தில் அவரது தனிப்பட்ட செயலராக இருந்தவர் சுரேஷ் பிரேமச்சந்திரன். விக்னேஸ்வரனுக்கு இது தெரியுமோ தெரியாது.

2010ஆம் ஆண்டு போர் முடிந்த கையோடு ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. ஒட்டுமொத்த தமிழினமும் மஹிந்தவுக்கு எதிராகச் சீற்றமுடன் எழுந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் தமிழர்களின் கையாலேயே அவர்களின் கண்ணைக் குத்த வைக்க ராஜபக்ஷக்கள் பாடுபட்டனர். ராஜபக்சக்களுடன் ‘டீல்’ பேசிக் கொண்டு பணத்தையும் பெற்றுக்கொண்டு அந்தத் தேர்தலில் தமிழர் வாக்குகளைப் பிரிக்கக் களமிறங்கியவர் யார்? அவர் 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டார். அவர் யார் என்று நான் சொல்லியா நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்?

2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தல் வந்தது. தமிழரின் ஒற்றுமைக்கான கோசம் பெரும் எடுப்பில் ஒலித்தது. ஆனாலும் அந்த ஒற்றுமையைக் குலைக்க விரும்பிய ராஜபக்ஷக்கள் தமிழர் தாயகத்தில் பணம் கொடுத்து சுயேச்சைக் குழுக்களை டசின் கணக்கில் களமிறக்கினர். அந்தத் தேர்தலில் கூட்டமைப்பின் வாக்கு வங்கியைச் சிதைத்த சிறீகாந்தாவும், சிவாஜிலிங்கமும் தனித்துப் போட்டியிட்டனர். அவர்கள் யாருடைய தேவையை நிறைவேற்ற, யாருடன் ‘டீல்’ பேசிக் களமிறங்கினர் என்பது தெரியாதா?

வடக்கு மாகாண சபையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரதிநிதி என்று தன்னைத் தானே கூறிக் கொண்டவர், தனது தனிப்பட்ட உதவியாளராக, அமைச்சரான பின்னர் பொதுமக்கள் தொடர்பு அதிகாரியாக யாரை நியமித்திருந்தார்? அவர் யார்? ராஜபக்ஷக்களின் புலனாய்வு அதிகாரியை நியமித்திருந்த அவர் இன்று உங்களுடன் சக வேட்பாளர்? இவையெல்லாம் மக்களுக்குத் தெரியாதா? இவை எல்லாவற்றுக்கும் மேலாக 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் யாருடைய ஏவலில் அவர் அந்தத் தேர்தலைப் புறக்கணிக்குமாறு கோரினார்?

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ போட்டியிட்ட போது கூட்டமைப்பு அவரைப் பகிரங்கமாக எதிர்த்தது. அவரைத் தோற்கடிக்குமாறு தமிழ் மக்களுக்கு அறைகூவல் விடுத்தது. தமிழ் மக்களை கோட்டாவுக்கு எதிராக வாக்களிக்கத் தூண்டியது. 3 இலட்சத்து 20 ஆயிரம் மக்கள் கூட்டமைப்பின் வேண்டுகோளுக்குத் தலைசாய்த்து வாக்களித்தார்கள். ஆனால், நீதியரசரே நீங்கள் என்ன செய்தீர்கள்? கோட்டாபயவுக்கு எதிராக வாக்களிக்கச் சொன்னீர்களா? இல்லைத்தானே. அப்படியானால் இப்போது சொல்லுங்கள், ராஜபக்ஷக்களுடன் இரகசிய ‘டீல்’ பேசியது கூட்டமைப்பா? விக்னேஸ்வரன் அணியா?

நீதிபதிகளான மக்களே, விடயங்களை சீர்தூக்கி ஆராய்ந்து உங்கள் தீர்ப்புக்களை எதிர்வரும் 5ஆம் திகதி வழங்குங்கள் என்று அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.

## கறுப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதியரசர் விக்னேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ள அவர், இத்தகைய செயற்பாடுகளினால் தன்னை அச்சப்படுத்த முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் காலத்தில் இராணுவம் முகாம்களுக்குள் முடக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கவேண்டும் என்றும் அவர் இந்தக் கடிதத்தில் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த கடிதத்தின் நகல்கள் பிரதமருக்கும், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

கடந்த ஜூலை 28 செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி வியப்புக்குரியது. யாழ்ப்பாணம் குருநகரில் இரவு 8 மணியளவில் நான் தேர்தல் பரப்புரை மேடையில் இருந்தபோது, முழுக் கறுப்புச் சீருடை அணிந்த 14 இராணுவத்தினர் (கறுப்புப் பூனைகள்?) மோட்டார் சைக்கிள்களில் வண்டிக்கு இருவராக கூட்ட அரங்குக்குள் தடதடவென்று பெரும் சத்தத்துடன் நுழைந்தனர்.

வாகன எஞ்சின்களை அலறவிட்டுத் தொல்லை கொடுத்தனர். நான் புறப்படும் வரை காத்திருந்தனர். பிறகு என் கார் புறப்பட்டபோது 14 ஆள்களுடன் 7 மோட்டார் சைக்கிள்களுடன் என் காரைச் சுற்றிச் சுற்றி வந்தனர். கொஞ்ச நேரம் ஓரத்தில் நின்றுவிட்டு என் கார் செல்லும் பாதையில் குறுக்கிட்டனர்.

பிறகு ஒரே வரிசையில் சென்று ஒரு பக்கச் சந்தில் போய் மறைந்தனர். என் காவல் பொலிஸார் என்னுடன் காருக்குள்ளேயே இருந்தனர். இந்த இராணுவத்தினர் எனக்கு எதையாவது உணர்த்த விரும்பினார்களா என்று தெரியவில்லை.

தேர்தல் நெருங்கி வரும் நேரத்தில் இவ்வாறான நடவடிக்கைகள் என்னைப் போன்ற வயதான ஒருவரை மிரளச் செய்து விடமாட்டா என்று போதிலும் மக் களுக்குத் தவறான செய்தியை வழங்கி வாக்களிப்பு நடைமுறையைப் பாதிக்கக் கூடும்.

இந்த சம்பவம் குறித்துப் புலனாய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று நம்புகிறேன். வட மாகாணத்தில் 2020 நாடாளுமன்றத் தேர்தல் இராணுவத்தின் இருப்பினால் பாதிப்பு ஏற்படாமல் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடைபெறும் என நம்புகிறேன் – என்றுள்ளது.

## சமஷ்டியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

காவத்தையில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முப்பது வருட கால மிருகத்தனமான பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டை வெற்றிகரமான வளர்ச்சிப் பாதையில் கொண்டு சென்றோம். துரதிர்ஷ்டவசமாக, 2015 இல், நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்ததால் அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் தடைப்பட்டன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒரு மாபெரும் தலைவர். அவரின் கொள்கைத் திட்டத்தை நாம் வெற்றிகரமாக செயற்படுத்த மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் வலுவான நாடாளுமன்றத்தை நிறுவ வேண்டும். இதற்குப் பொதுமக்களின் ஆதரவு எங்களுக்குத் தேவை.

எனவே, நாட்டின் முன்னேற்றத்துக்காக – ஒளிமயமான எதிர்காலத்துக்காகப் பாடுபடும் எமது கட்சிக்கு உங்கள் மதிப்புமிக்க பொன்னான வாக்குகளை எதிர்வரும் 5ஆம் திகதி வழங்குங்கள் – என்றார்.

## கூட்டமைப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் பலமான ஆணை தரவேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

சர்வதேச நாடுகளும், சர்வதேச அமைப்புகளும் தற்போது தமிழர்களின் பக்கம் நிற்கின்றன. இந்த அரிய சந்தர்ப்பத்தை நாம் தவறவிடக்கூடாது. சர்வதேசத்தின் ஊடாக அரசுக்கு அழுத்தம் கொடுத்து எமக்கான தீர்வை நாம் வென்றெடுக்க வேண்டும். அதற்கு எமது மக்களின் பலமான ஆணை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மிகவும் அவசியம். கூட்டமைப்புக்கான அந்த ஆணையை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கிலுள்ள எமது மக்கள் வழங்க வேண்டும்.

நியாயமான ஓர் அரசியல் தீர்வை அரசு தமிழர்களுக்குத் தந்தே ஆக வேண்டும். இல்லையேல் அது பாரிய பின் விளைவுகளைக் கொண்டுவரும். அந்த நிலைமை நாட்டுக்கு உகந்ததல்ல என்று அரசுக்கு நாம் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருக்கின்றோம்.

அரசியல் தீர்வு தொடர்பில் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் இருந்து இலங்கை அரசு பின்வாங்க முடியாது.

தமிழ்த் தலைவர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை சிங்களத் தலைவர்கள் மதிக்காமையாலேயே, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்றம் பெற்றது. அதனால் எமது போராட்டம் முப்பது வருடங்கள் ஆயுத வழியில் தொடர்ந்தது. மீண்டும் ஜனநாயக வழியில் நாம் போராடுகின்றோம். எமது இந்தப் போராட்டத்துக்கு சர்வதேசம் மதிக்கின்றது. எனவே, இலங்கை அரசும் எமது போராட்டத்தை மதித்து எமக்கான தீர்வை வழங்க வேண்டும் – என்றார்.

## அரச வேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்படுத்த முடியவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த வேட்பாளரின் அடாவடிகள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு நேரடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என யாழ். மாவட்டத்தில் உள்ள விசேட தேர்தல் அதிகாரி ஆணைக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்தும் எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

இவ்வாறு மாவட்ட விசேட அதிகாரி அறிக்கை சமர்ப்பித்த பின்பும் தெல்லிப்பளையில் ஆயிரம் பேர் வரையில் வாகனங்களில் ஏற்றிவந்து இறக்கப்பட்டு ஒரு மண்டபத்துக்குள் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. அந்தக் கூட்டம் தொடர்பில் அது இடம்பெறும்பெறும்போதே முறைப்பாடு கிடைத்தது. ஆயினும் ஒரு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் நேரில் போய்ப் பார்த்துவிட்டு வந்து அந்தக் கூட்டத்தில் ஆக 150 பேரே கலந்துகொண்டனர் என அறிக்கை சமர்ப்பித்துள்ளார். ஆனால் அந்தக் கூட்டத்திலே பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர் என அந்த அரசியல்வாதி சார்பான ஊடகம் ஒன்றிலேயே செய்தி வீடியோவுடன் வெளியிடப்பட்டது. அதன் பிரகாரம் ஆயிரம் பேர் வரை கூட்டத்தில் கலந்துகொண்டமை நிரூபணமாகின்றது.

இவ்வாறு கிடைக்கும் முறைப்பாடுகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதானால் அது கைது நடவடிக்கை வரை செல்லவேண்டும். ஆனால் அதற்கு ஆணைக்குழு தயங்குகின்றமையால் அது தேர்தல்கள் ஆணைக்குழுவா அல் லது அங்கஜன் ஆணைக்குழுவா என்று ஐயம் எழுவதும் நியாயப்பாடாகத்தான் உள்ளது.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தின் மேலதிக அரச அதிபர் ம. பிரதீபனைத் தேர்தல் அலுவலகத்துக்குள் நுழையவே கூடாது எனக் கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னரும் அதனை மீறியே அவரும் செயற்படுகின்றார். இதனால் நியாயமான பல ஐயங்கள் எழுகின்றன என்றார்.

# விக்கியின் வங்கிக் கணக்கில் சுமார் 70 லட்சம் ரூபா பணம்!

## சொத்து விவரங்களை வெளியிட்டார் அவர்

யாழ்ப்பாணம், ஓக. 01

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் வட மாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தனது சொத்துக்கள் பற்றிய விவரங்களைப் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவரது ஊடகப் பிரிவினால் நேற்று அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

விக்னேஸ்வரனின் உள்ளூர் வங்கிக் கணக்குகளில் மொத்தமாக ரூபா 4,424,724.24 பணமும் வெளிநாட்டு வங்கிக் கணக்குகளில் 9,618.98 பவுண்டுகள் பணமும் 1,210.33 டொலர்கள் பணமும் உள்ளன.

இவைதவிர, யாழ்ப்பாணத்திலுள்ள சண்டிலிப்பாய் இரட்டையபுலத்தில் ஒரு துண்டுக் காணியும் கொழும்பு 7இல் அவர் வசிக்கும் வீட்டின் மீது சீவிய உரித்தும் அவருக்கு இருக்கின்றன. இதனை தவிர அவருக்கு வாகனங்களோ வேறு எந்த சொத்துக்களுமோ இல்லை.

நீதிபதியாகவும், நீதியரசராகவும் பணி புரிந்த காலத்தில் விக்னேஸ்வரன் உழைத்த பணமும் முதலமைச்சராகப் பணி ஆற்றிய காலத்தில் அவருக்குக் கிடைத்த வேதனத்தில் ஏற்பட்ட சேமிப்பும் இவற்றுள் அடங்கும்.

இதேவேளை, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி வேட்பாளர்களின் சொத்து விவரங்கள் யாவும் சேகரிக்கப்பட்டு 232, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மக்கள் கூட்டணியின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன என்றும் இவற்றை பார்க்க விரும்புபவர்கள் தேர்தலின் பின்னர் முன் அனுமதியுடன் அவற்றைப் பார்வையிடலாம் என்றும் பாதுகாப்பு காரணங்களுக்காகத் தேர்தலில் வெற்றி பெறுபவர்களின் சொத்து விவரங்கள் மாத்திரமே பகிரங்கப்படுத்தப்படும் என்றும் சில தினங்களுக்கு முன்னர் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி அறிவித்திருந்த போதிலும் நீதியரசர் விக்னேஸ்வரன் தனது சொத்து விவரங்களைத் தேர்தலுக்கு முன்னரேயே மக்களுக்கு பகிரங்கப் படுத்தியிருக்கிறார்.

தேர்தலில் வெற்றி பெறும் ஒருவர் வேட்பாளராக இருந்தபோது எவ்வளவு சொத்துக்களை வைத்திருந்தார் என்பதை ஒருவர் அறிவதன் மூலம், அவர் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக் காலத்தில் எவ்வளவு சொத்துக்களைச் சேர்த்தார் என்பதையும் பதவித் துஷ்பிரயோகம் அல்லது முறைகேடுகள் மூலம் சொத்துக்களை சேகரித்தாரா என்பதையும் அறிய முடியும்.

இதேசமயம், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் கூட்டு கட்சிகள் செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி, நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்படும் வேட்பாளர்கள் தமது மாதாந்த படிகளின் 8 சதவீதத்தை பொதுமக்களின் நல்வாழ்வு திட்டங்களுக்காக இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அவர்கள் விரும்பிய ஒரு அறக்கட்டளை நிதியத்துக்கு மாதாந்தம் வழங்க வேண்டும்.

அது தமிழ் மக்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமாகவும் அமையலாம். ஆகக்குறைந்தது 2 சதவீதத்தை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுவான செலவீனங்களுக்காகவும் அவர்கள் வழங்கவேண்டும் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# பொதுத் தேர்தலுக்கு பின்னர் கெட்டகாலம்

## எச்சரிக்கின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஓக 01

பொதுத்தேர்தலின் பின்னர் நாட்டில் உதயமாகும் பொழுது நல்ல நேரமாக இருக்காது என்று ஜே.வி.பி. தலைவர் அநு ரகுமார திசநாயக்க தெரிவித்துள்ளார். மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசி பெற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் அவர் இதனைக் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேர்தலின் பின்னர் நாட்டில் ஏற்படப் போவது சிறந்தவொரு நிலை அல்ல என்பதை இப்போதே காட்டியுள்ளனர். மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றுக்கொள்ள முடியாது.

2010ஆம் ஆண்டு யுத்தத்துக்கு பின்னர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற போதும், பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியில் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர்களை அமைச்சு பதவி மற்றும் பணத்தைக் கொடுத்து விலைக்கு வாங்கினர்.

இந்தமுறையும் அவ்வாறான ஒரு நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. இந்த அரசு மூன்றில் இரண்டு பெரும்பான் மையைக் கோருவது, நாட்டில் தற்போது வெற்றிகொள்ளப்பட்டுள்ள ஜனநாயகத்தை இல்லாது செய்வதற்காகும் – என்றார்.

# வங்கி அட்டை மூலம் பணம் சுருட்டியவர் சிக்கினார்

திருடப்பட்ட வங்கி அட்டை ஊடாக சுமார் ஒரு லட்சம் ரூபாவுக்கு அதிகமான பணத்தைச் சுருட்டிய நபரொருவர் கேகாலை, பிந்தெனிய பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பிந்தெனிய பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிக்கு அமைய 26 வயதுடைய இந்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளான் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபரால் வீடொன்றில் இருந்து 50 ஆயிரம் ரூபா பணமும் மற்றும் வங்கி அட்டையொன்றும் திருடப்பட்டுள்ள நிலையில், அந்த வங்கி அட்டையில் இருந்து ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாவைப் பெற்றுள்ளார் எனப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சந்தேக நபர் நேற்று கேகாலை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட இருந்தார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பிரதமரின் பேரினவாதப் போக்கு

*"துப்பாக்கி ரவைகளால் நாட்டைப் பிளவுபடுத்த முயன்ற பிரபாகரனைப் போல வாக்குச் சீட்டுகளால் நாட்டைப் பிளவுபடுத்த சம்பந்தனுக்கு ஒருபோதும் அரசு அனுமதிக்காது"* - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இப்படி அறிவித்திருக்கின்றார். மினுவாங்கொடையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறியிருக்கின்றார்.

தமிழர்கள் தங்கள் உரிமையைக் கோரினால் அதன் அர்த்தம் பிரிவினை என்றுதான் தென்னிலங்கைக்குத் தோற்றுகின்றது.

*"காமாலைக் கண்ணுக்குக் கண்டது எல்லாம் மஞ்சள்"* என்பார்கள்.

அதுபோல, தமிழர்களின் நியாயமான கோரிக்கைகள் எல்லாம் பேரினவாத பௌத்த, சிங்களத்தின் கண்களில் பிரிவினை வாதம் போலத் தெரிகின்றது.

பேரினவாதம் என்ற காமாலை நோய் தென்னிலங்கைச் சிங்களத்தைப் பீடித்து நிற்கின்றது. அதனால்தான் இந்த நிலைமை.

'ஒன்றுபட்ட', 'பிரிக்க முடியாத', 'பிளவுபடாத', 'ஐக்கிய' இலங்கைக்குள் தீர்வு என்பதை வலியுறுத்தும் போதும் - அதனைத் திட்டவட்டமாகவும், தெளிவாகவும், உறுதியாகவும் தமிழர் தரப்புக் கோரும்போதும் - அவர்கள் பிரிவினையைக் கோரி நிற்கின்றார்கள் என்றே ராஜபக்ஷக்கள் கூறுகின்றனர். அவ்வளவு தூரத்துக்கு அவர்களின் கண்களைப் பேரினவாதம் என்ற காமாலை நோய் மறைக்கின்றது.

*"வடக்கு, கிழக்கு தொடர்பில் எந்த அரசியல் கட்சியால் கையெழுத்திடப்பட்ட உடன்பாடுகளையும் நாம் கவனத்தில் கொள்ள மாட்டோம்"* என்றும் பிரதமர் அந்தக் கூட்டத்தில் வைத்து அறிவித்திருக்கின்றார்.

அந்த அறிவிப்பில் 'அரசியல் கட்சி' என்று அவர் குறிப்பிட்டமை நல்ல சமிக்ஞை. தப்பித் தவறி 'இலங்கை அரசு' என்று அவர் குறிப்பிடாமல் விட்டார் என நாம் திருப்தியடையலாம்.

வடக்கு, கிழக்கு விவகாரம் தொடர்பில் இலங்கை அரசு, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைச் செய்திருக்கின்றது. அந்த ஒப்பந்தப் பிரகாரம், அரசமைப்புக்கு 13ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது. அப்படி அரசமைப்பு மூலம் செய்யப்பட்ட அதிகாரப் பகிர்வையும் இலங்கை அரசுகள் இதுவரை சரியாக நடைமுறைப்படுத்தவில்லை. குறிப்பாக காணி, பொலிஸ் அதிகாரங்கள் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை.

அதேபோல ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுக்களில் ஐக்கிய இலங்கைக்குள் தமிழர் தாயகப் பிரதேசங்களுக்கு சமஷ்டி முறையில் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கு இலங்கை இணங்கி ஒப்பமிட்டது.

இந்தியாவின் உத்தரவாதத்தோடு கையெழுத்தான இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையிலான தீர்வையோ -

நோர்வேயின் அனுசரணையுடன் ஒஸ்லோவில் இணக்கம் காணப்பட்ட உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான தீர்வையோ - கூட இலங்கை அரசு இன்னமும் நடைமுறைப்படுத்தவேயில்லை.

சர்வதேச மட்டத்தில் தான் இணக்கம் கண்டு ஒப்புக் கொண்ட நியாயமான ஏற்பாடுகளைக் கூடத் தென்னிலங்கை செய்யாமல் மறுத்து விட்டு, அதிலும் விட குறைந்தளவு திட்டத்துக்கு அதியுச்ச விட்டுக் கொடுப்புடன் தமிழர் தரப்பு இறங்கி வருகின்றபோது தமிழர்களை நையாண்டி பண்ணுவது போல - கேலி செய்வது போல - தமிழர் கோருவது பிரிவினை என்ற சாரப்படத் திமிர்த்தனத்தில் பேசுகின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

தமிழர்கள் கேட்கும் நியாயமான - ஐக்கிய இலங்கைக்குள் அடங்குகின்ற - தீர்வுகளைக் கூடத் தென்னிலங்கைச் சிங்களவருக்குப் பிரிவினையாகக் காட்டி, இனக் குரோதத்தையும், வன்மத்தையும், அடக்குமுறையையும் தூண்டிவிடும் போக்கைத்தான் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தத் தேர்தல் பரப்புரைகளில் பிரதான உத்தியாகக் கையாளுகின்றார்.

இந்த நாட்டில் இனங்களுக்கு இடையில் மீள் நல்லிணக்கமும், புரிந்துணர்வும், சௌஜன்யமும், நல்லுறவும் ஏற்படுவதற்கான வாய்ப்புகளுக்கு நிரந்தரமாக ஆப்பு வைக்கும் - பேரினவாதத்தைத் தூண்டிக் கிளர்ந்தெழ வைக்கும் - மோசமான செயற்போக்கே இது.

தேர்தல் அரசியலில் வாக்குகளைச் சுருட்டி அள்ளுவதற்காகப் பிரதமர் போன்ற உயர் பொறுப்பில் இருக்கும் ஒருவர் இப்படி இனவாதத்தைத் தூண்டிவிடுவது பிற்காலத்தில் மோசமான விளைவுகளையே ஏற்படுத்தும். புரிந்துணர்வு ஏற்படுவதற்கான வாய்ப்பை நிரந்தரமாக அடித்து மூடிவிடும் இந்தப் பேரினவாத ஆணவப் போக்கு.

அதன் விளைவு விபரீதமாக முடியும் என்பதை மட்டும் நேரத்துடன் எச்சரிக்க விரும்புகின்றோம்.

# நாங்கள் ஒன்றிணைந்தால் ராஜபக்ஷ அரசு மண் கவ்வும்

## பரப்புரைக் கூட்டத்தில் ரணில்



கொழும்பு, ஓக. 01

நாம் ஒன்றிணைந்து செயலாற்றினால் ராஜபக்ஷ அரசைத் தோற்கடிக்க முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

யக்கலவில் நேற்று நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் மிகவும் பழமைவாய்ந்த கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கடந்த காலப் பகுதியில் நடைபெற்ற 15 பொதுத்தேர்தல்களிலும் போட்டியிட்டிருக்கின்றது. நாட்டில் வேறெந்தவொரு கட்சிக்கும் இத்தகைய வரலாறு இல்லை. ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தமையால் இந்தத் தேர்தலில் வெற்றிபெற்று எவ்வாறேனும் நாடாளுமன்றத்துக்குள் நுழைய விரும்புகின்றோம் என்று சிலர் நினைக்கின்றார்கள். ஆனால், இந்தத் தேர்தலுக்கு எவ்வாறேனும் நேரடியாக முகங்கொடுக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாக இருந்தது.

இவ்வாறானதொரு நிலையில் கொரோனா வைரஸ் பரவலால் நெருக்கடி நிலையொன்று உருவாகும் என்று எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை. கட்சியை விட்டுச் சென்ற சிலர், கொரோனாவைரஸ்பரவல்தொடர்பில் முன்னரே அறிந்திருந்தால் கட்சியிலிருந்து பிரிந்து சென்றிருக்க மாட்டோம் என்று இப்போது என்னிடம் கூறுகின்றார்கள். ஏனெனில் இந்தப் பாரதூரமான நெருக்கடி நிலைக்கு முகங்கொடுக்கக் கூடிய இயலுமை ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாத்திரமே இருக்கின்றது.

இம்முறை பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னர் கட்சிக்குள் காணப்பட்ட பிரச்சினைகளுக்கும், கட்சிக்கு வெளியில் காணப்பட்ட பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. எது எவ்வாறெனினும் தற்போது நாங்கள் 16 ஆவது தடவையாக வும் பொதுத்தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

இம்முறையும் அனைவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு பயணிப்பதற்கு நான் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டேன். பிரதமர் வேட்பாளராகப் போட்டியிட விரும்புபவர்களுக்கு அந்த வாய்ப்பை வழங்குவதற்குத் தயாராக இருந்தேன். ஆனால், யானை சின்னத்திலேயே களமிறங்க வேண்டும் என்றும், அதனை மாற்றமுடியாது என்றும் குறிப்பிட்டேன்.

எனினும், குறித்தவொரு பகுதியினர் கட்சியிலிருந்து வெளியேறிச் சென்றுவிட்டு, தற்போது அவர்களே உண்மையான ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்கள் என்று கூறுகின்றனர். எமது ஐக்கிய தேசியக் கட்சி இலங்கையின் பல்வகைமைத்தன்மையை - அதாவது சிங்கள பௌத்தர்கள் உள்ளிட்ட அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சியாகும்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சிங்கள பௌத்த அடிப்படையைக் கொண்ட கட்சி. இவ்விரு கட்சிகளுக்கும் இடையிலேயே இம்முறை வாக்குகள் பிரியும். வெள்ளையர்கள் இன அடிப்படையில் பிளவுபடுத்திய எமது நாட்டின் பல்வகைமைத்தன்மையை ஏற்பதன் ஊடாகவே அதனை மீண்டும் ஒன்றிணைக்க முடியும். நாட்டின் தலைவர் அனைத்து இன, மதங்களைச் சேர்ந்த மக்களையும் ஒரே விதமாகக் கையாளத் தெரிந்தவராக இருக்கவேண்டும்.

பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கும் அதேவேளை, ஏனைய அனைத்து இன மக்களும் தமது மதத்தைப் பின்பற்றுவதற்கும் மொழியைப் பயன்படுத்துவதற்குமான இடைவெளியை வழங்கவேண்டும். அனைத்து இனத்தவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு இலங்கையர் என்ற அடிப்படையில் ஒன்றாக முன்னெடுக்கும் பயணத்திலேயே சிங்கள இனத்தின் பாதுகாப்பு வலுவடையும்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்திருக்கின்றன ரவூப் ஹக்கீம், திகாம்பரம், மனோ கணேசன், ரிஷாத் பதியுதீன் போன்றோர் 'தம்மை வெட்டினாலும் பச்சை நிறமே ஓடும்' என்று கூறுவார்களா? நிச்சயமாக இல்லை. ஆனால், அவர்கள் அனைவரும்தான் உண்மையான ஐக்கிய தேசியக் கட்சியினர் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சியின் வரலாற்றில் பல்வேறு பிரச்சினைகள், முரண்பாடுகள் ஏற்பட்டுள்ள போதிலும் எவரும் பிரிந்து சென்று இவ்வாறு தனிக்கட்சியை உருவாக்கவில்லை. அது ஐக்கிய தேசியக் கட்சியினரின் நடைமுறையல்ல. நாம் ஒன்றிணைந்து செயலாற்றினால் இந்த அரசைத் தோற்கடிக்க முடியும் - என்றார்.

# தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு 6 இடங்கள் என்கின்றார் மனோ

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணி ஆறுக்கும் மேற்பட்ட ஆசனங்களை வெல்லும் என்று கூட்டணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

2015 நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் ஆறு பேர் தெரிவானார்கள். இம்முறை அதனை விடவும் எண்ணிக்கை அதிகரிக்கலாம்.

இரத்தினபுரி, கம்பஹா மற்றும் கேகாலை மாவட்டங்களில் எமது வேட்பாளர்கள் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. அதேபோல் கொழும்பில் இருந்தும் இருவர் வரலாம் எனவும் மனோ கணேசன் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, ஜனநாயக மக்கள் முன்னணியில் இருந்து வெளியேறியவர்கள் விலை போன அரசியல்வாதிகள் எனவும் மனோ விமர்சித்துள்ளார்.



அத்துடன் அரசியலமைப்பின் 13 மற்றும் 19 ஆவது திருத்தச்சட்டங்கள் என்பன இரு கண்கள்போன்றவை. அவற்றை நீக்குவதற்கு இடமளிக்கமாட்டோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# மொட்டு, சு.க., சஜித் அணி ஆகிய மூன்றும் கூட்டமைப்பின் வெற்றியை விரும்புகின்றன

## இப்படிக் கூறுகின்றார் சிறீகாந்தா

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெற்றியீட்டி நாடாளுமன்றத்திற்கு வருவதையே சிங்களப் பேரினவாதக் கட்சிகளான பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் சஜித் பிரேமதாஸா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய மூன்று தரப்புகளும் விரும்புகின்றன என தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற வேட்பாளருமான சிறிகாந்தா தெரிவித்தார்.

நேற்று பாஷையூரில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர்களுக்கு சில சலுகைகளையும் வசதி வாய்ப்புகளையும் கொடுத்தால், அவர்களுடன் பிரச்சினை இல்லாத சமரச அரசியலை சுலபமாக நடத்திச்செல்ல முடியும் என்பதை இந்தக் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கின்றனர்.

சம்பந்தன், சுமந்திரன், சேனாதிராஜா போன்றவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதும், அவர்களின் பின்னணி என்ன என்பதும், அவர்களை எப்படி சமாளித்துச் சரிக்கட்டுவது என்பதும் சிங்களத் தலைவர்களுக்கு அத்துபடியாக உள்ளது.




இதே நேரத்தில் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து அவர்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தும் எந்த அரசியல் அணியும் வெற்றியீட்டி நாடாளுமன்றம் வருவதை சிங்கள பௌத்த பேரினவாத அரசியல்வாதிகள் எவரும் விரும்பவில்லை.

ஈழத் தமிழர்களின் பிரதிநிதிகளாக நேர்மையான அரசியல்வாதிகள் தெரிவு செய்யப்பட்டால் அவர்களைக் கையாள்வது மிகவும் கடினம் என்பதை பேரினவாத தரப்புக்கள் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கின்றன. இதனைத் தமிழ் மக்கள் தயவு செய்து புரிந்து கொள்ளவேண்டும்.

எதிர்வரும் தேர்தலில் ஒரு புறத்தில் வெளிப்படையான ஒத்துழைப்புத் தமிழர்களான டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் ராமநாதன், விஜயகலா மகேஸ்வரன், சந்திரகுமார், பிள்ளையான், கருணா உள்ளிட்ட பலர் களத்தில் இருக்கின்றனர். தமிழ்த் தேசியத்தைப் பற்றி முழங்கிக் கொண்டு அபிவிருத்தி அரசியலை அணைத்தபடி தமிழினத்தின் பாதையைத் திசை மாற்றுவதற்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு துணிந்து நிற்கின்றது.

இந்த இரண்டு சுயநல முகாம்களுக்கு எதிராக இரண்டு அணிகள் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுக்க மக்களின் ஆதரவை நாடி நிற்கின்றன. இந்த இரண்டு அணிகளில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் நீதியரசர் விக்கினேஸ்வரன் தலைமையில் ஐந்து தமிழ் கட்சிகள் ஒரே கொடியின் கீழ் அணி திரண்டு நிற்கின்றன. அதே நேரத்தில் தம்பி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனித்துப் போட்டியிடுகின்றது.

உண்மையில் இது தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் தனிமரம் தோப்பாகாது என்பதை உணர்ந்து கொள்ளாமல் எங்கள் சைக்கிள் தம்பிகள் காட்டிய அர்த்தமற்ற பிடிவாதம் தேவையற்ற ஒரு மோதலை எமக்குள் உருவாக்கியிருக்கின்றது. தமிழ் தேசியத்தின் ஜனநாயக எழுச்சிக்கான வாக்குகள் பிரிந்து போய் ஒத்துழைப்புத் தமிழர்களும், நடிப்புத் தமிழ் தேசியவாதிகளும் அரசியல் லாபம் பெற தமிழ் மக்கள் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.

ஐந்து கட்சிகள் இணைந்து ஒற்றுமைப்பட்ட ஒரு கூட்டணியாக தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்ற பெயரில் களத்தில் நிற்கும் நிலையில் அதனை ஆதரித்து நல்லதோர் தலைமை எமது இனத்திற்கு கிடைப்பதை எமது மக்கள் உறுதி செய்ய வேண்டும்.

உண்மையில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு இடையில் தான் நேரடியான போட்டி இப்போது ஏற்பட்டுள்ளது. இதன் முடிவை எமது பிரச்சினையில் அக்கறை கொண்டுள்ள பல நாடுகள் ஆவலோடு எதிர்பார்த்து நிற்கின்றன. இந்தக் குருஷேத்திர யுத்தத்தில் கூட்டமைப்பை தங்கள் சுயநலத்திற்காக சீரழித்தவர்களான சம்பந்தன், சுமந்திரன், சேனாதிராஜா ஆகியோர் தோற்கடிக்கப்படவேண்டும்.

அந்த தோல்வி சிங்கள தேசத்திற்கு சொல்லக்கூடிய செய்தி எமது விடுதலைப் போராட்டத்தில் ஓர் திருப்பு முனையாக அமைவதோடு இறுதியில் தீர்க்கமான வெற்றிக்கும் நிச்சயம் வழி வகுக்கும். – எனத் தெரிவித்தார்.

# குடா நாட்டை அச்சுறுத்தி வந்த கொள்ளைக் கும்பல் பிடிபட்டது

## இருவருக்கு வலை வீச்சு

யாழ்ப்பாணம், ஓக. 01

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அண்மைக்காலமாக இரவுவேளைகளில் வாள்களைக் காண்பித்துக் கொள்ளையில் ஈடுபட்டு வரும் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் இருவர் தப்பி ஓடித் தலைமறைவாகியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாய் – கட்டுடைப் பகுதியில் உள்ள பற்றைக் காணிக்குள் கூடாரம் அமைத்து மறைந்து வாழ்ந்து வந்த நிலையில் இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதுதொடர்பில் பொலிஸார் தெரிவித்தவை வருமாறு:-

காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சேனாதீரவின் கீழான உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிதர்சன் தலைமையிலான சிறப்புக் குற்றத் தடுப்புப் பொலிஸார் முன்னெடுத்த நடவடிக்கையில் இந்தக் கொள்ளைக் கும்பல் சிக்கிக் கொண்டது.

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் 5 கொள்ளைச் சம்பவங்கள், பளை, தெல்லிப்பழை, இளவாலை பொலிஸ் பிரிவுகளில் வீடுகளுக்குள் புகுந்து வாள்களைக் காண்பித்து கொள்ளையில் ஈடுபட்டமை ஆகியவற்றுடன் தொடர்புடையவர்கள் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தனர். இந்தக் கொள்ளைக் கும்பலைச் சேர்ந்த இருவருக்கு சாவகச்சேரி மற்றும் கிளிநொச்சி நீதிமன்றங்களில் கொள்ளைக் குற்றச்சாட்டு வழக்குகளும் நிலுவையில் உள்ளன.

இந்த நிலையில் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுடையில் பற்றைக் காணிக்குள் தற்காலிக கூடாரம் அமைத்து மறைந்திருந்தபோது கொள்ளைக் கும்பலைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர். கட்டுடை மற்றும் நவாலிப் பகுதிகளைச் சேர்ந்த 22 மற்றும் 26 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து வாள் ஒன்றும் 4 பவுண் தங்க நகையும் மீட்கப்பட்டுள்ளன.

கும்பலைச் சேர்ந்த மேலும் இருவர் தப்பி ஓடித் தலைமறைவாகியுள்ளனர். அவர்களிடம் 2 வாள்கள் மற்றும் 15 பவுண் நகைகள் உள்ளன என்று கைது செய்யப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொள்ளைக் கும்பல் இரவு வேளைகளில் வீடுகளுக்குள் புகுந்து வாள்களைக் காண்பித்து அச்சுறுத்திக் கொள்ளையில் ஈடுபட்டு வந்துள்ளது. அவர்கள் ஒரு இடத்தில் கொள்ளையில் ஈடுபட்டால் அதன் பின்னர் வேறு ஓர் பிரதேசத்துக்குச் சென்று வாடகைக்கு வீடு எடுத்துத் தலைமறைவாகி வாழ்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர் என வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் விசாரணைகளின் பின்னர் மானிப்பாய் பொலிஸில் முற்படுத்தப்படுவார்கள் – என்றும் பொலிஸார் கூறினர்

# ராஜித, ரூமிக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல்

## ஏனைய இருவரையும் சாட்சிகளாக அறிவித்து விடுவிக்குமாறு சட்டமா அதிபர் உத்தரவு



வெள்ளை வான் ஊடகவியலாளர் சந்திப்பு தொடர்பான வழக்கில், முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கும் அரச மருந்தாக்க கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ரூமி மொஹமட்டுக்கும் எதிராகக் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரினால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு, வெள்ளை வான் ஊடகவியலாளர் சந்திப்பு தொடர்பான வழக்கில், ஏனைய இரு சந்தேக நபர்களையும் (வான் சாரதிகள் எனத் தம்மை அடையாளப்படுத்தியவர்கள்) வழக்கிலிருந்து விடுவிக்குமாறு, நீதிவான் நீதிமன்றத்துக்குச் சட்டமா அதிபர் அறிவித்துள்ளார்.

குறித்த இருவரையும் வழக்கின் சாட்சியாளர்களாகப் பெயரிடுமாறு சட்டமா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார் என்று சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி அரசதரப்புச் சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன தெரிவித்தார்.

# லங்காபுர பிரதேச செயலக ஊழியரின் உறவினருக்கும் கொரோனா தொற்று

கொழும்பு, ஓக. 01

பொலநறுவை லங்காபுர பிரதேச செயலக ஊழியர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவரது உறவினர் ஒருக்கும் கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

லங்காபுர பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவருக்குக் கொரோனா உள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டது.

கந்தக்காடு மறுவாழ்வு மையத்தில் கொரோனா தொற்றுடன் கண்டறியப்பட்ட நோயாளியுடன் இந்த உத்தியோகத்தர் நெருக்கமாகத் தொடர்புபட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

நோயாளியுடன் நேரடித் தொடர்புடையவர்களைக் கண்டு பிடிப்பதற்கான நடவடிக்கைகள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிலையிலேயே லங்காபுர பிரதேச செயலக ஊழியரின் உறவினர் ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

# 23 கிலோகிராம் ஹெரோயினுடன் வெல்லம்பிட்டியில் ஒருவர் கைது!

கொழும்பு, ஓக.01

வெல்லம்பிட்டி பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்து 23 கிலோகிராம் ஹெரோயினை விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர், பிரபல பாதாளக் குழு உறுப்பினர் ஒருவரின் மைத்துனர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்

புக்கமுவ வீதியில், பிரண்டியாவத்தை பிரதேசத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கொம்பனித்தெரு பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# தூய்மையான அரசியலில் சஜித்

## ரஞ்சித் மத்தும பண்டார புகழாரம்



கொழும்பு,ஜுலை31

சஜித் பிரேமதாஸ தூய்மையான அரசியல் செயற்பாட்டையே முன்னெடுத்து வருகின்றார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'மஹிந்த ராஜபக்ஷ – ரணில் விக்கிரமசிங்க இணைந்து தங்களுக்கு சவாலை ஏற்படுத்தியுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருக்கு எதிராக போலி குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

மத்திய கலாசார நிதியத்தில் இருந்து எடுக்கப்பட்ட பணம் நியாயமான முறையிலேயே செலவிடப்பட்டுள்ளது. இந்த நிதியம் தொடர்பான செயற்பாடுகளில் 11 பேர் ஈடுபட்டு வருகின்றனர்.

அதற்கமைய அதிலிருந்து பணம் எடுக்கப்பட்டால் இவர்களின் அனுமதியுடனே எடுக்கமுடியும். இந்நிலையில் இந்த பணம் தொடர்பில் அப்போதைய நிதி அமைச்சர் உள்ளிட்ட 8 பேர் கைச்சாத்திட்டுள்ளனர்.

இதில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம் மற்றும் பிரதமர் செயலாளர் ஆகியோர் மாத்திரமே கைச்சாத்திடாது இருந்துள்ளனர். இங்குதான் சதித்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த பணம் வீடுகள் அமைப்பதற்கோ வேறு எதற்கோ செலவிடப்படவில்லை. விகாரைகளின் திருத்தத்திற்கும், புத்தர் சிலைகள் அமைப்பதற்கும் மற்றும் தேவாலயங் களின் திருத்த வேலைப்பாடுகளுக்குமே பயன்படுத்தப்பட்டுள்ளது. நாங்கள் தெளிவாகச் சொல்கின்றோம்.

சஜித் பிரேமதாஸ என்பவர் ஏனையவர்களை போன்றவரல்லர், அவர் தூய்மையான அரசியல் செயற்பாடுகளிலேயே ஈடுபட்டு வருகின்றார். தற்போது உள்ள சில அரசியல்வாதிகள் தங்களது தவறை மறைப்பதற்காக இன்னுமொருவருக்கு எதிராக வேண்டும் என்றே திட்டமிட்டு குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர்.

தவறு இடம்பெற்றிருந்தால் நீதிமன்றத்திற்கு செல்லுங்கள். ராஜபக்ஷவின் காலத்தில் எந்த விகாரை மற்றும் மதஸ்தலங்களின் அபிவிருத்தி செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன?.

இதுதான் மஹிந்த – ரணில் விக்கிரமசிங்கவின் சேறுபூசல் செயற்பாடுகள். இதற்கு ஏமாற்றமடையாது எதிர்வரும் 5 ஆம் திகதி இந்த செயற்திறன் அற்ற அரசாங்கத்திற்கு தக்க பாடத்தை புகட்டுங்கள் – என்றார்.

# உரும்பிராயில் கொள்ளை!


உரும்பிராய் பகுதியில் நேற்று அதிகாலை வீட்டில் இருந்தவர்களைத் தாக்கி நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன. உரும்பிராய் மேற்கு சோளம் தோட்டப் பகுதியில் உள்ள வீடு ஒன்றிலேயே இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் பின்பக்கமாக சென்ற நபர்கள் வீட்டின் கதவை உடைக்க முற்பட்டுள்ளனர். இதன்போது சத்தம் கேட்டு வீட்டின் குடும்பஸ்தர் வெளியில் வந்துள்ளார். இதன்போது அவரைக் கம்பியால் தாக்கியதுடன் வீட்டில் இருந்தவர்களை வாளைக் காட்டி அச்சுறுத்தி நகைகளைக் கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

வீட்டில் இருந்தவர்களின் அவலக் குரல் கேட்டு அயலவர்கள் ஓடி வந்தபோது கொள்ளையர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

# "கூடவே இருந்து முதுகில் குத்தும் துரோகக் கும்பல்"

## மனோ கணேசன் கவலை


Mano Ganesan
7h ·
என்னை எவ்வளவு முடியுமோ, அவ்வளவு அவதூறு செய்கிறார்கள்
இப்போ காசுக்கு விலை போகின்ற ஒரு ஜந்துவை அரசாங்க தொலைகாட்சியிலே காசு கொடுத்து பேச வைத்து, அதை காணொளியாக செய்து, Fake ID FB Page (பக்கம்) மூலம், பணம் செலுத்தி sponsor செய்து, முகநூலில் அவதூறு பரப்புகிறார்கள்.
தலைநகர் தமிழ் சமூகம் மத்தியில் பிரதேசவாதத்தையும் கிளப்பி அதிலேயும் குளிர்காய முனைகிறார்கள்.
கூடவே இருந்து முதுகில் குத்தும் இந்த துரோக கும்பல் எது, யாரென தெரிகிறதா?

"கூடவே இருந்து முதுகில் குத்தும் இந்தத் துரோகக் கும்பல் எது? யாரெனத் தெரிகின்றதா??

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான மனோ கணேசன் தனது முகநூலில் இன்று பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"என்னை எவ்வளவு முடியுமோ, அவ்வளவு அவதூறு செய்கின்றார்கள்!

இப்போ காசுக்கு விலை போகின்ற ஒரு ஜந்துவை அரசதொலைகாட்சியிலே காசுகொடுத்து பேசவைத்து, அதைக் காணொளியாகச் செய்து, Fake ID FBPage (பக்கம்) மூலம், பணம் செலுத்தி sponsor செய்து, முகநூலில் அவதூறு பரப்புகின்றார்கள்.

தலைநகர் தமிழ் சமூகம் மத்தியில் பிரதேசவாதத்தையும் கிளப்பி, அதிலேயும் குளிர்காய முனைகின்றார்கள். கூடவே இருந்து முதுகில் குத்தும் இந்தத் துரோகக் கும்பல் எது? யாரெனத் தெரிகின்றதா?" – என்றுள்ளது.

# தனிமைப்படுத்தப்பட்ட 76 பேருமே விடுவிப்பு!

கொரோனாத் தொற்றுச் சந்தேகத்தில் தனிமைப்படுத்தப்பட்ட 76 பேரும் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளனர் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை 7ஆம் விடுதியில் சிகிச்சை பெற்ற ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் அந்த விடுதியில் சிகிச்சை பெற்ற 76 நோயாளிகள் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதனடிப்படையில் வடக்கு மாகாணம் மற்றும் வெளி மாகாணங்களைச் சேர்ந்த சுமார் 76 பேர் அவர்களது வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்படுத்தப்பட்டுள்ளனர். அவ்வாறு சுய தனிமைப்படுத்தப்பட்டவர்களில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த 63 பேரும்,முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த 6 பேரும்,கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த 2 பேரும்,வவுனியாவை சேர்ந்த 2 பேரும், புத்தளம், பொலநறுவை, குருநாகல் மாவட்டங்களைச் சேர்ந்த தலா ஒவ்வொருவருமாக 76 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நபர் கொழும்பில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவருக்கு கடந்த இரண்டு நாள்களாக மேற்கொண்ட பீ.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு தொற்று இல்லை என உறுதியாகியுள்ளது.

இதனையடுத்து அவர் வைத்தியசாலையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். இதனால் தொற்று நோய்த் தடுப்பு பிரிவினருடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் அடிப்படையில் தனிமைப்படுத்தப்பட்ட 76 பரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். – என்றார்

(முன்னர் வந்த செய்தி 8 ஆம் பக்கத்தில்)

# புலிகளை அழித்த சு.கவிடம் நியாயம் பெறவே அக்கட்சியில் போட்டியிடுகிறாராம் விண்ணன்

(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,ஓக.01

தமிழீழ விடுதலைப் புலிகளையும், விடுதலைப் போராட்டத்தையும் இல்லாமல் அழித்ததில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு நேரடி பங்களிப்பு உள்ளது என்று அக் கட்சி சார்பில் யாழ் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் விண்ணன் என்று அழைக்கப்படும் பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம் ஒப்புக் கொண்டுள்ளார்.

அழித்தவர்களிடம் நியாயம் கேட்பதே சிறந்தது என்ற அடிப்படையிலேயே அந்த கட்சி சார்பில் தான் தேர்தலில் களமிறங்கியுள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நண்பகல் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழீழ விடுதலைப் புலிகளையும், விடுதலைப் போராட்டத்தையும் நரி தந்திரத்தின் ஊடாக ஐக்கிய தேசிய கட்சி அழித்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நேரடியாகவே செயற்பட்டது என்றார்.

இதன் போது அங்கிருந்த ஊடகவியலாளர்களால் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி விடுதலைப் போராட்டத்தை நேரடியாக அழித்தது என்பதை ஏற்றுக் கொள்ளுகின்றீர்களா என்று கேள்வி எழுப்பியிருந்தனர். இதற்கு பதிலளித்த அவர், ஆம் விடுதலைப் புலிகளை அழித்ததில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நேரடியாக செயற்பட்டது என்றார்

ஒரு பொருளை நாங்கள் எங்கு தொலைத்தோமோ அங்குதான் அந்த பொருளை தேட வேண்டும்.

இதனால்தான் அழித்தவர்களிடமே நியாயம் கேட்கவும், எமக்கு தர வேண்டியதை கேட்டுப் பெற்றுக் கொள்ளவும் அதே கட்சியில் தேர்தலில் களமிறங்கியுள்ளேன்.

நான் இவ்வாறு சொல்லுவதால் கட்சிக்குள் எனக்கு எதிரான கருத்துக்களோ, நடவடிக்கைகளோ முன்னெடுக்கப்பட்டால் அதை பற்றி நான் கவலைப்படப் போவதில்லை.உண்மைகளைச் சொல்லியே நான் அரசியலுக்கு வந்துள்ளேன்.

எனது எதிர்பார்ப்பு என்னவென்றால் தமிழ் மக்கள் இம்முறை நாடாளுமன்றத்திற்கு புது முகங்களை அனுப்ப வேண்டும். பழையவர்களால் எந்த பயனும் இல்லை என்பதை மக்கள் நன்கு புரிந்து விட்டார்கள். – என்றார்.




# விரக்தி மனநிலையிலிருந்து விலகி வாக்களிக்க முன்வருமாறு அழைப்பு

## யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுக்கிறது

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், ஜூலை 31

விரக்தி மனநிலையிலிருந்து விலகி வாக்களிக்க முன்வாருங்கள் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறைகூவல் விடுத்துள்ளது.

நாடாளுமன்ற தேர்தலில் தொடர்பில் தமது நிலைப்பாட்டை தெரிவிக்கும் விதத்தில் யாழ்பாண பல்கலைக்கழக மாணவர்ஒன்றியத்தியால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையின் முழு விவரங்கள் வருமாறு:-

தமிழ் மக்களின் ஆயுத ரீதியான விடுதலைப் போராட்டம் மௌனிக்கப்பட்டு பத்து ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் நாம் மீண்டும் ஒரு பொதுத் தேர்தலை எதிர்கொள்கின்றோம்.

போர் மௌனிப்பின் பின் எம்மக்களின் சுயாதிபத்தியத்துக்கான போராட்டத்தை அரசியல் ரீதியாக முன் எடுக்க வேண்டும். இன அழிப்புக்கான பொறுப்புக் கூறலுக்கு இலங்கை அரசை சர்வதேச ரீதியாக உந்துவதன் மூலம் தமிழ் மக்களுக்கான பரிகார நீதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதிலிருந்து பிறக்கக்கூடிய ஒரு தீர்வே தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவு செய்யும் என்பதில் யாழ் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் எப்போதும் தெளிவாகவே இருந்து வந்திருக்கிறது.

ஆயினும் எமது கடந்த பத்தாண்டுகால அரசியல் பயணத்தைத் திரும்பிப் பார்க்கும் போது இவ்விடயங்களில் நாம் சிறிதும் முன்னேறவில்லை என்பது விரக்தி தரும் ஒரு விடயமாகவே இருக்கிறது.

இன்றைய நிலையில் தென்னிலங்கையில் பேரினவாத சக்திகள் பெருமளவில் உருத்திரண்டுள்ளன. இலங்கை ஒரு பௌத்த சிங்கள தேசம் என்பதை உறுதிப்படுத்துவதில் அவை முனைந்து நிற்பது வெள்ளிடைமலையாக உள்ளது. வடக்கிலே தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் சமய சாதீய முரண்பாடுகளையும் போரின் பின்னான வறுமை நிலையையும் தமக்கு சாதகமாக பயன்படுத்தி அரசியல் களத்தில் காலூன்றிவிட வேண்டும் என்ற பெரு விருப்போடு தென்னிலங்கைக் கட்சிகளும் வடகிழக்கிலுள்ள அவர்களின் முகவர்களும் களமிறங்கியுள்ளனர்.

இந்நிலையில் தமிழ்தேசிய நிலைப்பாட்டிலிருந்து செயல்படுவதாக சொல்லும் கட்சிகள், கட்சிகளுக்குள்ளான உட்பூசல்களாலும் கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகளாலும் பிளவுண்டு சிதறுண்டவைகளாக இத்தேர்தலை எதிர்கொள்கின்றன. ஜனாதிபதி தேர்தலை ஒட்டி இக் கட்சிகளுக்கிடையில் கொள்கையிலும் செயற்பாட்டிலும் ஓர் உடன்பாட்டை எட்ட நாம் மேற்கொண்ட முயற்சிகளையும் இக்கட்சிகள் பயனற்றவையாக்கி விட்டன.

எனவே இன்றைய சூழ்நிலை பெரும் விரக்தி தருவதாக அமைந்திருப்பதால் தமிழ் மக்களாகிய நாம் தேர்தலில் ஆர்வம் காட்டாமல் ஒதுங்கிவிடவோ அல்லது சலுகைகளைப் பிரச்சாரம் செய்யும் கட்சிகள் பக்கம் சாய்ந்து விடவோ உந்தப்படலாம். அது தவறு என்பதை நாம் தெளிவாக வலியுறுத்த விரும்புகின்றோம்.

ஆகவே யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினராகிய நாம் எமது வழுவா தமிழ்த்தேசிய மரபின் நிலைநின்று பின்வரும் வேண்டுகோள்களை எமது மக்களிடம் முன்வைக்கின்றோம்.

விரக்தி மனநிலையிலிருந்து விலகி வாக்களிக்க முன்வாருங்கள். தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் அர்ப்பணத்தோடு இருக்கும் கட்சிகளை தெரிவு செய்யுங்கள்.

கட்சி எல்லைகளுக்கப்பால் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக அஞ்சாமல் குரலெழுப்பக் கூடிய ஆளுமைகளை அடையாளங்கண்டு வாக்களியுங்கள். இதன் மூலம் தேர்தலுக்கு முன் எம்மால் எட்டப்பட முடியாமல் போன ஒற்றுமையை தேர்தலின் பின்னாவது செயற்படு தளத்தில் எட்ட முடியுமென்று நாம் நம்புகிறோம்.

முப்பது ஆண்டு கால போராட்டத்தில் நாம் இழந்தவை பெரிது. அவற்றின் கைமாறு இன்றில்லாவிட்டாலும் என்றாவது கிட்டவேண்டும் என்பதில் உறுதியாக இருப்போம். -எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அங்கொடை லொக்காவின் கழுகு மன்றில் முன்னிலை



கொழும்பு, ஓக.01

மீகொட - நாவலமுல்ல, மயான வீதியிலுள்ள, விலங்கு பண்ணையொன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட கழுகு, நேற்றைய தினம் ஹோமாகம நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துருகிரிய பொலிஸாரால் இந்த கழுகு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

பாதாளக்குழுவின் தலைவரான அங்கொட லொக்காவால் போதைப் பொருள்களை விநியோகிப்பதற்காக பயிற்சியளிக்கப்பட்ட இந்த கழுகு, அத்துருகிரிய பொலிஸாரால் நேற்று கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 361 தேர்தல் முறைப்பாடுகள் வடக்கில் இதுவரைப் பதிவு

(ந.லோகதயாளன்)

2020ஆம் ஆண்டின் நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கும் இதேநேரம் வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் விதிமுறை மீறல்களின் பதிவுகளும் அதிகரித்துள்ளன.நேற்றுவரை 361 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளில் அதிகப்படியானவை யாழ்ப்பாணம் நிர்வாக மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளன. இங்கே 114 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன். வவுனியா மாவட்டத்தில் 84 முறைப்பாடுகளும், மன்னார் மாவட்டத்தில் 55 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் 44 முறைப்பாடுகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 64 முறைப்பாடுகளுமாக யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 158 முறைப்பாடுகளும், வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 192 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.




# விமலுக்கு வாக்களிக்குமாறு பரப்புரை செய்வோர் தமிழினத்தின் துரோகிகளே

## பழனி திகாம்பரம் கடும் விசனம்



கொழும்பு, ஓக.01

கொழும்பு வாழ் தமிழர்கள் மனோ கணேசனுக்கு வாக்களிக்க வேண்டாம். விமல் வீரவன்சவுக்கு வாக்களியுங்கள் எனத் தேர்தல் பரப்புரை செய்யும் தமிழர்கள், தமிழ் இனத்தின் துரோகிகளாகக் கருதப்படுவார்கள். மலையக மக்கள் தொடர்பில் 'அப்பா கனவு கண்டார்' என்று குறிப்பிடுகின்றார்கள். குறுகிய காலத்தில் கனவுகளை முடிந்தவரை நாங்கள் நிறைவேற்றினோம். மலையகத்தில் நாங்கள் செய்த சேவைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க மக்கள் மீண்டும் அதிகாரத்தை வழங்க வேண்டும்.

- இவ்வாறு முன்னாள் அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

கொழும்பு வாழ் மலையக இளைஞர்களுடனான சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் மலையகத்துக்கு எவ்வளவு முக்கியமோ அதுபோலவே, கொழும்பு வாழ் தமிழ் மக்களுக்கும் முக்கியமான தேர்தல். இந்தநிலையில் கொழும்பு வாழ் தமிழர்கள் மனோ கணேசனுக்கு வாக்களிக்கக் கூடாது எனவும், அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு வாக்களிக்க வேண்டும் எனவும் கூறும் தமிழர்கள் தமிழினத்தின் துரோகிகளாகக் கருதப்படுவார்கள்.

அப்பா கனவு கண்டார் என சிலர் கூறுகிறார்கள். ஆனால், மலையகம் தொடர்பில் கனவு கண்டவர்கள் நாங்கள். நாம் கண்ட கனவே இன்று நிறைவேறியுள்ளது. .தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் சிறந்த தலைவர். பொதுத்தேர்தலில் வெற்றி பெறுவது அல்லது தோல்வியடைவது என்பது எனக்கு ஒரு பிரச்சினை இல்லை.

நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் அதிகரிக்க வேண்டும். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் வேட்பாளர்கள் கூட வெற்றிபெற வேண்டும் என்றே நான் நினைக்கிறேன். ஆனால், அவர்கள் நான் தோல்வியடைய வேண்டும் என்றே நினைக்கிறார்கள். நான் அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் எனது உறவினர்கள் எவருக்கும் எனது அமைச்சில் தொழில் வழங்கவில்லை. எனது மகனுக்கான பெற்றோர் கூட்டங்களில்கூட இதுவரையில் கலந்துகொண்டதில்லை. மலையகத்தில் நான் இதுவரையில் செய்த சேவையைத் தொடரவே அதிகாரத்தைக் கேட்கின்றேன் - என்றார்.

# முன்னாள் சி.ஐ.டி. பணிப்பாளர் ஷானி அபேசேகர கைது

## சாட்சியங்களை மாற்றினார் எனக் குற்றச்சாட்டு

குற்றப் புலனாய்வு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர கைது செய்யப்பட்டுள்ளார்.

வர்த்தகர் மொஹமட் சியாம் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட் டுள்ள, மேல் மாகாண முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர் தனவினால் அவரது வீட்டில் ஆயுதங்கள் வைத்திருந் தமை, ஆயுதங்கள் கடத்தியமை தொடர்பான விசாரணை களிலான ஆதாரங்களில் மாற்றம் செய்தார் என்று ஷானி அபேசே கர மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில், இன்று காலை கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் நாரஹேன் பிட்டியிலுள்ள அவரது வீட்டில் வைத்து ஷானி அபேசேகர கைதுசெய்யப்பட்டார்.

அவர் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு அலுவல கத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணைக்குட்படுத் தப் பட்டு வருகின்றார்.

இதேவேளை, சி.ஐ.டி. பணிப்பாளர் பதவியிலிருந்து தன்னை இடைநிறுத்தி, மேல் மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பிரத்தியேக உதவியாளராக இடமாற்றம் செய்தமை மற்றும் பணி இடை நீக்கம் செய்தமை தொடர் பில், ஷானி அபேசேகர உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி. விக் ரமரத்னவின் வேண்டுகோளுக்கி ணங்க, தேசிய பொலிஸ் ஆணைக் குழு வின் அனுமதியின் அடிப்படையில் குறித்த இட மாற்றம் வழங்கப்பட்டு பணி இடைநீக்கம் செய்யப்பட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் மற்றுமொரு மனு தாக்கல் செய் யப்பட்டுள்ளதால், குறித்த மனுவை அவரது சட்டத்தரணி நேற்று மீளப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. கடந்த ஆட்சியில் எதிர்க்கட்சியிலி ருந்த பல்வேறு பிரபலங்கள் தொடர்பான விசாரணைகள், ஷானி அபே சேகரவி னால் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.

ஆயினும், ஷானி அபேசேகர, அரசி யல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய இயங் கினார் என்று தற்போதைய அரசு குற் றஞ்சாட்டி வரும் நிலையில், அவர் திட்ட மிட்டுப் பழிவாங்கப்படுகின்றார் என்று தற்போதைய எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அவன்காா்ட் நிறுவ னத்தின் தலைவர் நிஸ்ஸங்க சேனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் பழிவாங்கல் தொடர்பான முறைப்பாட்டுக்கு அமைய, சாட்சியம் அளிப்பதற்காக முன்னிலையாகு மாறு அவர்கள் இருவ ருக்கும் வழங்கப்பட்ட அழைப்பா ணையை இரத்துச் செய்யுமாறு கோரி அநுரகுமார திஸாநாயக்கவும், ஷானி அபேசேகரவும் ரிட் மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த மனுக்கள் பரிசீலிக்கப்படும் வரை, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸா நாயக்கவும், குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபே சேகரவும் சாட்சியம் அளிப்பதற்கு அழைக்கப்படமாட்டார்கள் என அரசியல் பழி வாங்கல்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனா திபதி ஆணைக்குழு உறுப் பினர்கள் கடந்த திங்கட் கிழமை மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் வாக்குறுதி அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உரிமைக்காக சகலருமே வாக்களிப்பது அவசியம்

## ரட்ணஜீவன் வலியுறுத்தல்

கொழும்பு, ஜூலை 31

உங்களது உரிமையை நிலை நாட்ட அனை வரும் வாக்களிக்க வேண்டும் என தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ண ஜீவன் கூல் அழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்– எதிர்வரும் ஓகஸ்ட் 5ஆம் தேதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் கொரோனா தொற்று அச்சம் காரணமாக மக்கள் வாக்களிப்பதற்கு தயங்குகிறார்கள் அல்லது பயப்படுகிறார்கள் என்ற நிலைமை காணப்படுகின்றது. உண்மை யில் மக்கள் இது தொடர்பில் அச்சப்படத் தேவை யில்லை.

நாங்கள் வாக்களிப்பின்போது கொரோனா தொற்று தடுப்புக்காக மேற்கொள்ளவேண்டிய அனைத்து தடுப்பு நடவடிக்கைகளையும் மேற் கொண்டு வருகின்றோம். எம்மைப் பொறுத்த வரை ஏற்கனவே சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி எவ்வாறு வாக்களிப்பை மேற்கொள்வது தொடர்பாக மாதிரி வாக்களிப் பைப் பரீட்சித்துப் பார்த்திருக்கிறோம்.

தேர்தல் தினத்தன்று வாக்குச் சாவடியில் வாக்களிப்பின்போது கொரோனா தொற்று ஏற் படக்கூடிய சாத்தியக்கூறு குறைவானதாகவே இருக்கும். அதாவது நீங்கள் வீதியில் பயணிக் கும்போதோ அல்லது தங்களுடைய அன்றாடக் கட மைகளைச் செய்யும்போதோ கொரோனா தொற்று ஏற்படுகின்ற வாய்ப்பைவிட வாக்களிப்பு நிலையத் துக்குள் தொற்று ஏற்படக்கூடிய சாத்தி



யக்கூறு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

அத்தோடு நீங்கள் வாக்களிப்பு நிலை யத்துக் குள் செல்லும்போது மாஸ்க் அணிந்து கைகளைக் கழுவி ஏனை யோர் பாவித்த பேனைகளைப் பாவிக்காத வகையில் பல சுகாதார நடைமுறை களை வாக்களிப்பு நிலையங்களில் மேற் கொண் டுள்ளோம். வீதிகளில் நடமாடும் போது ஏற்படும் தொற்றுக்குரிய வாய்ப்பை விட வாக்களிப்பு நிலையத்தில் மிகவும் குறைவானது. எனவே உங் களுக்குரிய வாக்களிப்பு உரிமையைச் சரியாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும் – என்றார்.

# மொட்டுக் கட்சி வேட்பாளருக்கு தூக்கு தண்டனை!

## இரத்தினபுரி மேல் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

கொழும்பு, ஜூலை 31

லங்கா பொதுஜன பெரமுனவின் இரத்தினபுரி மாவட்ட வேட்பாளர் பிரேமலால் ஜயசேகர உள்ளிட்ட மூன்று பேருக்கு இரத்தினபுரி மேல் நீதிமன் றம் இன்று தூக்குத் தண் டனை விதித்தது.



2015 ஜனாதிபதித் தேர் தல் காலத்தில் கஹவத்தை பகுதியில் இடம்பெற்ற துப் பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்ட சம் பவத்திலேயே பிரேமலால் ஜய சேகர உள்ளிட்ட மூன்று பேருக்குதூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர் தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பாக இரத்தினபுரி மாவட்டத்தை பிரதிநிதித்து வப்படுத்தி பிரேமலால் ஜயசேகர போட்டியிடவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ். போதனா வைத்தியசாலையில்

# ஏழாம் விடுதியில் சிகிச்சை பெற்ற 70 நோயாளிகள் தனிமைப்படுத்தல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்.போதனா வைத்தியசாலை 7ஆம் விடு தியில் சிகிச்சை பெற்ற ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் அந்த விடுதியில் சிகிச்சை பெற்ற நோயாளிகள் அனை வரும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட் டுள்ளனர்.

கொரோனா தொற்று உறுதிப்படுத்தப் பட்டவர் 7ஆம் விடுதியின் மலசலகூடத் தைப் பயன்படுத்தியமை மற்றும் சிற்றுண் டிச் சாலைக்குச் சென்றிருந்த நிலையில் வடக்கு மாகாண சுகாதாரக் குழுவின் தீர் மானத்தின் அடிப்படையில் மேற்படி தீர் மானம் எடுக்கப்பட்டது.

இதனடிப்படையில் வடக்கு மாகா ணம் மற்றும் வெளி மாகாணங்களைச் சேர்ந்த சுமார் 70 பேர் அவர்களது வீடு களில் சுயதனிமைப்படுத்தலுக்கு உட் படுத்தப்பட் டுள்ளனர்.

சவுதி அரேபியாவிலிருந்து கடந்த 7ஆம் திகதி நாடு திரும்பிய ஒருவர் விடத் தற்பளை தனிமைப்படுத்தல் நிலையத் தில் தங்கவைக்கப்பட்டிருந்தார்.

அவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டிருந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டு 7ஆம் விடுதி யில் சிகிச்சை பெற்றார். கடந்த 25ஆம் திகதிவரை அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந் தார் என்று சுகாதார அமைச்சுக்கு அறிவிக் கப்படிருந்தது.

அதன் பின்னர் அவர் விடத்தற்பளை தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு மீள மாற்றப்பட்டிருந்தார்.

அவருக்கு கொரோனா தொற்று உள் ளமை கடந்த திங்கட்கிழமை உறுதிப்ப டுத்தப்பட்டது. அதனால் யாழ். போதனா வைத்தியசாலை 7ஆம் விடுதியில் பணி யாற்றும் மருத்துவ சேவையாளர்கள் நால்வர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட் படுத்தப்பட்டதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் வடக்கு மாகாண சுகாதாரக் குழு நேற்று கூடியது. இதன் போது யாழ். போதனா வைத்தியசாலை 7ஆம் விடுதியில் விவகாரம் கலந்துரை யாடப்பட்டது.

கொரோனா தொற்று உறுதிப்படுத் தப்பட்டவர் 7ஆம் விடுதியின் மலசல கூடத்தைப் பயன்படுத்தினார் என்றும் வைத்தியசாலை சிற்றுண்டிச் சாலைக்குச் சென்றிருந்தார் என்றும் தகவலளிக்கப் பட்டது.

அதனால் ஆபத்தை முன்கூட்டியே தடுக்கும் வகையில் யாழ். போதனா வைத் தியசாலையின் 7ஆம் விடுதியில் ஜூலை 22ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை சிகிச்சை பெற்ற நோயா ளிகள் அனைவரும் சுயதனிமைப்படுத் தலுக்கு உள்படுத்தப்படவேண்டும் என்று வடக்கு மாகாண சுகாதாரக் குழு வின் தீர்மானத் தின் அடிப்படையில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதனடிப்படையில் அவர்களைக் கண்டறிந்து சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தும் பணி நேற்று மாலை ஆரம் பிக்கப்பட்டது. வடக்கு மாகாணம் மற்றும் பொலநறுவை, குருநாகல் என சுமார் 70 பேர் இவ்வாறு அவர்களது வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்படுத்தப்பட் டுள்ளனர்.

அவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

# யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

## நாடாளுமன்றத் தேர்தல் - 2020

## எனது அன்புக்குரிய வாக்காளப் பெருமக்களே!
## எனது அன்புக்குரிய வர்த்தகப் பெருமக்களே!

நான் ஒரு வர்த்தகராக இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் தேர்தலில் போட்டியிடுவதற்குரிய காரணம்;

1. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் வட பகுதி மக்கள் பல்வேறு இராணுவ நடவடிக்கைகள் மூலமாக எமது தேசத்தைக் கைப் பற்றியதன்மூலம் பல்லாயிரம் கோடிரூபாய்களை எமது தேசம் இழந்து நிற்கின்றது.
2. இறுதி யுத்தத்தை முள்ளிவாய்க்கால் வரை கொண்டு சென்று, பல்லாயிரம் உயிர்களை இழந்து நிற்கும் எமது சமூகத்திற்கு ஒரு தீர்வைக் கொடுக்கவேண்டிய கட்சியாக இந்தக் கட்சி இருக்கின்றது.
3. எமது தேசத்தில் காணாமல் போனோர் மற்றும் யாழ்.குடாநாட்டில் 2006 தொடக்கம் 2009 காலப்பகுதி யில் சுட்டுக்கொலை செய்யப்பட்டவர்கள் விவரங்களைத் திரட்டி அதற்கொரு ஆணைக்குழுவை அமைத்து, விசாரணை செய்யப்படவேண்டும்.
4. தமிழீழ வைப்பகத்தில் வைபிலிடப்பட்ட பல்லாயிரம் கோடி தங்க நகைகளை மீளளித்தல் அல்லது அதற்குரிய நஷ்டஈட்டை அரசு வழங்க வேண்டும்.
5. மயிலிட்டித் துறைமுகத்தை அப்பகுதியைச் சார்ந்த கடற்தொழிலாளர் சமுதாயத்திடம் ஒப்படைக்கப் படல் வேண்டும்.
6. இராணுவத்தால் அபகரித்து வைத்திருக்கும் தனியார் காணிகளை உடனடியாக உரியவர்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.
7. அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு முற்றுமுழுதான அபிவிருத்தித் திட்டம் கொண்டுவரப்படல் வேண்டும்.
8. எங்கள் பிரதேசத்தில் இருக்கும் அனைத்து வர்த்தகர்களின் ஒற்றுமையுடன் பங்குதாரர்களாக பல நிறுவனங்களை ஆரம்பித்து, 4 வீத வட்டி கடன் 20 ஆண்டுகால அடிப்படையில் பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பைக் கொண்ட பல தொழிற்சாலைகளை அமைத்து, இளைஞர்கள் யுவதி களுக்கு வேலை வாய்ப்பை வழங்கவேண்டும்.
9. இவைகள் யாவற்றையும் நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்புக் கூறவேண்டிய இந்தக் கட்சியிலேயே எங்களுக்கு கிடைக்க வேண்டிய சகல உரிமைகளையும் முதலீடுகளையும் அழிவுகளுக்குக் கிடைக்கவேண்டிய நஷ்டஈடுகளையும் நாடாளுமன்றத்தில் பேசிப் பெறுவதற்காகவேனக்கு உங்கள் வாக்குகளை அளிக்குமாறு தயவாக வேண்டி நிற்கின்றேன்.
10. என் அன்பான வர்த்தக மற்றும் வாக்காளப் பெருமக்களே! தற்போதைய சூழலில் உங்கள் அனைவரையும் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்காததையிட்டு மனம் வருந்துகின்றேன். தேர்தல் முடிந்த பின் 60 நாள்கள் நான் இந்த மாவட்டத்திலே தங்கியிருந்து உங்கள் எல்லோரையும் சந்தித்து, உங்கள் பிரச்சினைகள், தேவைகள் பற்றிய சகல விபரங்களையும் அறிந்து நாடாளுமன்றத்துக்குக் கொண்டு சென்று, அதற்குரிய தீர்வை எடுப்பேன் என்றும் உங்களுக்கு உறுதிபடக் கூறுகின்றேன்.



**கை** சின்னத்துக்கும் அங்கஜன் இராமநாதன் அவர்களின் வெற்றி இலக்கம் **1** இற்கும் எனது வெற்றி இலக்கமாகிய இலக்கம் **5** இற்கும் வாக்களித்து உங்கள் வெற்றியை நிலைநாட்டுங்கள்!

தமிழ்த் தேசியமும் தமிழ்த் தாயும் வாழ்க.



ஆளும் கட்சியும் அடுத்த ஐந்தாண்டுக்கு ஆட்சியில் இருக்கப்போகும் கட்சியான எங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் எமது மாவட்டத்தின் பாரிய அபிவிருத்திக்கும் உரிமைகளுக்கும் வித்திடுங்கள்.

'உங்கள் வாக்கு உங்கள் உரிமை சரியான முறையில் வாக்களியுங்கள்!'



# பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம்
## (விண்ணன்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

facebook.com/vinnan05

காலைக்கதிர் Kalaikkathir

# ரூ.3 கோடி 25 லட்சம் பெறுமதியான தீயணைப்பு வாகனம் ஆக ரூ.68 லட்சத்துக்கே காப்புறுதி செய்யப்பட்டுள்ளதாம்

## நெருக்கடியில் யாழ். மாநகரசபை

யாழ்ப்பாணம்,ஓக.01

மாநகர சபையின் தீ அணைப்பு இயந்திரத்தின் உண்மைப் பெறுமதி மறைக்கப்பட்டு தவறான பெறுமதிக்கு காப்புறுதி செய்தமையினாலேயே உடனடியாக அடுத்த கட்ட நடவடிக்கைக்கு செல்ல முடியாமல் நிர்வாகப் பணித் தொகுதி திணறுகின்றது என மாநகர சபை உறுப்பினர் ந.லோகதயாளன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 7ஆவது மாதாந்த கூட்டம் நேற்று மாலை சபையின் மண்டபத்தில் இடம் பெற்றது. இதன்போதே தீ அணைப்பு வாகனக் காப்புறுதியில் ஏற்பட்ட மாறுபாடு அதனது நிலைமை தொடர்பில் தனியான விசாரணை மேற்கண்டே ஆக வேண்டும் என்ற பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் விவரம் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு 2014ஆம் ஆண்டு 3 கோடியே 25 லட்சம் ரூபா பெறுமதிக்கு புதிதாக இந்த வாகனம் கிடைத்தபோதும் வெறும் 68 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியிடப்பட்டு வருடாந்தம் ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா காப்புறுதி செலுத்தப்பட்டு வந்துள்ளது.

தற்போது வாகனம் விபத்திற்குள்ளாகி முழுமையான சேதம் அடைந்துள்ளது. இதனை திருத்த கணிப்பிடும் பெறுமதி கோடியை தாண்டுகின்றது. இருப்பினும் காப்புறுதி நிறுவனமோ குறித்த வாகனத்திற்காக கணிக்கப்பட்ட தொகையை வழங்குமா என்பது கேள்விக்குறி. இதனால் ஒரு தொகை நிதி சபையின் பொறுப்பிலேயே செலவிடப்பட வேண்டிய அவலம் அதிகாரிகளின் தவறினால் ஏற்படும் என்றே கருதுகின்றேன். கடந்த 2020 - 06 - 16 அன்று விபத்திற்குள்ளான வாகனமும் இழுத்து வரப்பட்டு சபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

புதிதாக கிடைத்த வாகனத்திற்கு குறைந்த தொகையில் காப்புறுதி செய்தமை ஆணையாளரின் முழுமையான தவறு. இந்த விடயத்திற்கு கணக்காளரும் பொறுப்பு கூறியே ஆக வேண்டும். ஏனெனில் இந்த மாவட்டத்திற்கே உரித்தான சொத்து இன்று இழக்கப்பட்டுள்ளது. மக்களின் வரிப்பணம் வீணாக அதிகாரிகளே காரணமாகவே இருந்துள்ளனர் எனக் கருதுகின்றேன். இதே நேரம் தகவல் அறியும் சட்டத்தின் மூலம் நான் கோரப்பட்ட விடயத்திற்கு இயந்திரப் பொறியியலாளர் இன்னும் அறிக்கை சமர்ப்பிக்கவில்லை என 17ஆம் திகதி எழுத்தில் நிர்வாகம் பதில் தந்தனர்.

இவ்வாறு எழுத்தில் தந்த தகவலும் பொய் என்றே அறிய முடிந்தது. ஏனெனில் இயந்திரப் பொறியியலாளர் கடந்த 9 ஆம் திகதியே அறிக்கை சமர்ப்பித்து விட்டார். –என்றார்.

இதன்போது பதிலளித்த கணக்காளர் –

இந்த விடயத்தில் எனது பொறுப்பு ஏதும் கிடையாது. வந்த காப்புறுதிச் சிட்டைக்கு கொடுப்பனவு செய்தமை மட்டுமே எனது விடயம் என்றார்.

இருப்பினும் இது தொடர்பில் பதிலளித்த ஆணையாளர் –

இந்த விடயத்தில் ஓர் தவறு நடந்துள்ளதை ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் அது என்னுடைய பிழை அல்ல. இது வந்த நாள் முதலே 68 லட்சம் ரூபா பெறுமதியிலேயே காப்புறுதி செய்யப்படுகின்றது. அதனையே நானும் செய்தேன். எனக்கு முன்பும் இரு ஆணையாளர்கள் இதனைத்தான் செய்துள்ளனர். – என்றார்.

இதனை அடுத்து இவ்விடயம் தொடர்பில் உடனடியாக தனியான குழு அமைத்து விசாரணை செய்ய வேண்டும் என்ற பிரேரணயை உறுப்பினர் ந.லோகதயாளன் முன்மொழிய உறுப்பினர் சுபாதீஸ் வழிமொழிந்தார். அது ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

# மின் தடை

யாழ்ப்பாணம், ஓக.01

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக **இன்று சனிக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரை –**

**யாழ் பிரதேசத்தில் -**

சுன்னாகம் மின் நிலைய பிரதேசம், உரும்பிராய் பிரதேசம், அண்ணா பண்ணை, விளாத்தியடி, அங்கிலிப்பாய், அன்னங்கை, குமரகோட்டம், கோண்டாவில் இ.போ.ச பிரதேசம், கொடிகாமம், கறுக்காய், வாழைத்தோட்டம், கரம்பன், வறணி, கரம்பைக்குறிச்சி, சுட்டிபுரம் அம்மன் கோவிலடி, இயற்றாலை, நாவற்காடு, குடமியன், மிருசுவில் வடக்கு, கல்வியங்காடு GPS வீதி பிரதேசம், இருபாலை டச்சு வீதி, கோப்பாய் பொலிஸ் நிலையம், பாற்பண்ணை பிரதேசம், கலாசாலை வீதி திருநெல்வேலி, முகாமைத்துவபீட பிரதேசம் குருக்கள் கிணத்தடி, கணேஸ்வரம் பிரதேசம் தெல்லிப்பளை, ஆனைக்கோட்டை, மூத்த விநாகர் கோவிலடி, சங்கரப்பிள்ளை வீதி, நவாலி சென் பீற்றஸ் தேவாலயம், வேலக்கைப் பிள்ளையார் கோவிலடி, நவாலி அரசடி, அட்டகிரி ஆகிய பிரதேசங்களிலும் –

**நாளை 02.08.2020 ஞாயிற்றுக் கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரை**

**யாழ் பிரதேசத்தில் -**

மாலுசந்தி, அல்வாய், நாவலடி, வியாபாரிமூலை, இன்பருட்டி, காந்தியூர், மந்திகை, மந்திகை ஆதார வைத்தியசாலை, மரின் வெல்த் ஐஸ் தொழிற்சாலை, ஶ்ரீலங்கா ரெலிக்கொம் கரவெட்டி, மந்திகை, பலாலி வீதியில் திருநெல்வேலி சந்தியிலிருந்து பலாலி வீதி வேம்படி சந்தி வரை, பனிக்கர் லேன், திண்ணை விடுதி, தலங்காவில் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி கொமர்ஷல் வங்கி, தபால் பெட்டி சந்தி, கந்தர்மடம் சந்தி, இலுப்பையடி சந்தி, சிவன் அம்மன் வீதி, அன்னசத்திர வீதி, ஆரியகுளம் சந்தி, அம்மன் வீதி கந்தர்மடம், நாவலர் வீதியில் புகையிரத கடவையிலிருந்து அம்பலவாணர் வீதி ஆத்தியடி வரை, பலாலி வீதி பருத்தித்துறை வீதியிலிருந்து வீரமாகாளி கோவில் வரை, ஆரியகுளம் சந்தியிலிருந்து இராசாவின் தோட்ட சந்தி வரை, கம்பஸ் லேன், தின்னவேலி புறப்பாட்டி டெவலப்பர்ஸ் பிறைவேற் லிமிற்ரெட், நொதேர்ண் சென்றல் கொஸ்பிற்றல், Bright Inn, AVNOR பிறைவேற் லிமிற்ரெட், டம்றோ பலாலி வீதி, IBC தமிழ், BCCAS ஆகிய பிரதேசங்களிலும் மின்தடை இருக்கும் என மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## பொதுத்தேர்தலையிட்டு

# மதுபான விற்பனை நிலையங்கள் மூடல்

## மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை

எதிர்வரும் 05ஆம், 06 ஆம் திகதிகளில் நாடு பூராகவும் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் மூடுமாறு மதுவரித் திணைக்கள ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தல் காரணமாக, தேர்தல்கள் ஆணைக்குழுவின் வேண்டுகோளுக்கு அமைய, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கு அமைய நடந்துகொள்ளாத மதுபான விற்பனை நிலைய உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்டத்தைக் கடுமையாக அமுல்படுத்தவும், அவர்களின் அனுமதிப்பத்திரங்களை இடைநிறுத்தவும், அவர்களுக்கு எதிராக 'தொழில் குற்றம்' எனும் குற்றச்சாட்டைப் பதிவு செய்யவும் நாடு பூராகவும் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று மதுவரித்திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பான முறைப்பாடுகளை 1913 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலமாக மதுவரித் திணைக்கள தலைமையகத்தில் நிறுவப்பட்டுள்ள விசேட செயற்பாட்டு நிலையத்துக்கு அறிவிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான வழக்கின் தீர்ப்பு ஒத்திவைப்பு

*கொழும்பு, ஓக. 01*

*வில்பத்து - கல்லாறு, மரிச்சுக்கட்டி பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் வனப்பகுதியில் சட்டவிரோதமாக காடழிப்பு செய்து மேற்கொள்ளப்பட்டுள்ள சட்டவிரோத குடியேற்றங்களை அகற்றுமாறு கோரி முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் உள்ளிட்ட தரப்பினருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் தீர்ப்பு மேன்முறையீட்டு நீதிமன்றினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.*

*சுற்றாடல் நீதிக்கான மத்திய நிலையத்தால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளான ஜனக்க டி சில்வா, நிஷ்சங்க பந்துல கருணாரத்ன ஆகிய நீதிபதிகள் குழாமினால் அறிவிக்கப்படவிருந்தது.*

*இருப்பினும், இந்த நீதிபதிகள் வராத காரணத்தால் மேல்முறையீட்டு நீதிமன்ற மண்டப எண் 204 இல் நேற்று விசாரிக்க திட்டமிடப்பட்டுள்ள அனைத்து வழக்குகளும் ஓகஸ்ட் 26 வரை ஒத்திவைக்கப்படும் என்று மேல்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.*

*எவ்வாறாயினும், வில்பத்து வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்படும் தினம் இது வரை வெளியிடப்படவில்லை.*





யாழ்ப்பாண மாநகர சபையின் சைவசமய விவகார குழுவின் நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு நிகழ்வு நாவலர் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகார குழுவினால் வருடந்தோறும் நல்லூர் முருகன் ஆலய உற்சவகாலத்தில் வெளியிடப்படும் நல்லைக்குமரன் நூல் வெளியீடும் வருடந்தோறும் யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகார குழுவினால்வழங்கப்படும் யாழ் விருது வழங்கும் நிகழ்வும் நாட்டில்தற்போதுள்ள கொரோனாசூழ்நிலையைக் கருத்தில் கொண்டு சுகாதார நடைமுறையினை பின்பற்றி யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் இடம்பெற்றது

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகார குழுவின் தலைவரும் யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளர் த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர்கள், சைவ சமய குழுவின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்

நிகழ்வில் 'யாழ்விருது' நல்லை ஆதீன முதல்வர் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர தேசிக சுவாமிகள்

சைவ சமய விவகார குழுவினால் இவ்வருடத்திற்கான யாழ்விருதுக்கு தெரிவு செய்யப்பட்ட கவிஞர் சோ. பத்மநாதனுக்கு வழங்கிகௌரவித்தார் பொற்கிளியினை யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளர் வழங்கி வைத்தார். அதைத் தொடர்ந்து நல்லைக்குமரன் மலர் வெளியிடப்பட்டது நல்லைக்குமரன் மலர் முதல் பிரதியினை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பிரதிநிதி பெற்றுக்கொண்டார். இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்ப்பாண மாநகரசபை துணை முதல்வர் து.ஈசன் கலந்து கொண்டு சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் சிவலிங்கராஜா கலந்து கொண்டார். நிகழ்வில் யாழ் விருதினைப் பெற்ற கவிஞர் சோ.பத்மநாதன் ஏற்புரையினை நிகழ்த்தியிருந்தார்

# இனத்துக்குள் பிளவுகள் வரக்கூடிய வகையில் உருவாக்கப்பட்ட திட்டமே இரணைமடு குடிநீர்

## பரப்புரைக் கூட்டத்தில் சிறிதரன் தெரிவிப்பு







இனத்துக்குள் பிளவுகள் வரக்கூடிய வகையில் உருவாக்கப்பட்ட திட்டம்தான் இரணைமடு குடிநீர்த் திட்டம்.

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்ட வேட்பாளருமான சி.சிறிதரன் தெரிவித்தார்.

பூநகரி, முக்கொம்பன் பகுதியில் நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:–

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து யார் எங்கு குடியேறினார்கள் என்று அனைவருக்கும் தெரியும். 1901ஆம் ஆண்டு இரண்டுமடுக்களாக இருந்ததை இணைத்து இரணைமடுவாக ஆங்கிலேயர்கள் ஒரு குளத்தைக் கட்டினார்கள். குளம் உருவாக்கப்பட்ட பிற்பாடு அந்தக் குளத்தைச் சூழ மக்கள் அந்தத் தண்ணீரை நம்பி குடியேறினார்கள். யாழ்ப்பாணத்திலும் ஆங்கில மொழிமூலம் படித்த எட்டாம் வகுப்புக்கு மேல் சித்தி பெற்றவர்களைக் காணி கொடுத்து அங்கே குடியேற்றினார்கள் அந்தக் குடியேற்றத் திட்டத்தில் யாழ்ப்பாணத்தில் பல ஊர்களில் இருந்தவர்களும் அங்கு குடியேற்றப்பட்டார்கள். அதனைவிட 1956,1983 ஆம் ஆண்டு தென்பகுதியில் ஏற்பட்ட வன்முறைகளாலும் பெரும்பகுதியான மக்கள் அந்த மண்ணிலே வந்து குடியேறினார்கள்.

இன்றைக்கு மலையகப் பகுதிகளில் இருந்த பல மக்கள் அங்கு குடியேறி வாழ்கின்றார்கள். இவ்வாறு காலத்துக்குக் காலம் விவசாயம் செய்து கொண்டு வருகின்றபோது இப்போது 42 ஆயிரம் ஏக்கர் வயல்கள் அக்குளத்துக்குக் கீழ் விவசாயம் செய்யக் கூடிய நிலம் உள்ளது.

42 ஆயிரம் ஏக்கர் வயல் நிலத்தில் 20 ஆயிரம் ஏக்கர் வயல் நிலத்துக்கு மட்டுமே நீர் பாய்ச்சக் கூடிய வாய்க்கால்கள் உண்டு. மிகுதி 22 ஆயிரம் ஏக்கர்களும் மானவாரி நிலங்கள். வாய்க்கால்கள் உள்ள 20 ஆயிரம் ஏக்கர் வயல்களில் ஆகக்கூட 15 ஆயிரம் ஏக்கரில் மட்டுமே சிறுபோகம் செய்யக் கூடியதாக உள்ளது. இது புனரமைப்பு செய்வதற்கு முதல் 7 ஆயிரம் அல்லது 8 ஆயிரம் ஏக்கர்களாக இருந்தன. அதிலும் கடந்த வருடம் 15 ஆயிரம் ஏக்கர் விதைத்து இறுதி நேரம் தண்ணீர் இல்லாமல் குளத்தில் பக்கோ போட்டு வெட்டித்தான் தண்ணீர் எடுத்தார்கள். குடிக்கவும் தண்ணீர் வைத்திருக்கவில்லை. குளத்தில் கடைசி 10 அடி தண்ணீர் வைத்திருக்க வேண்டும் என்கின்ற விதி உண்டு. காரணம் மாடுகள், உயிரினங்கள் குடிப்பதற்காக அதனையும் தாண்டி கடந்த முறை தண்ணீரை வெட்டி எடுத்தார்கள்.

இம்முறை சித்திரையில் சிறு மாரி பொழிந்த வடியால் இப் பிரச்சினை தோன்றவில்லை. அதனால் குளத்தில் சிறியளவு தண்ணீர் உள்ளது. மற்றைய உயிரினங்களுக்காகக் குடிக்கத் தண்ணீர் தர மாட்டோம் என்று கிளிநொச்சியைச் சார்ந்த யாருமே தெரிவித்தது கிடையாது.

அங்குள்ள விவசாயிகள் கேட்பது வயல் நிலங்களுக்கான உற்பத்தி பிரச்சினைகளை முதலிலே தீருங்கள் என்று. அதற்கு ஏதாவது ஒரு முடிவைச் சொல்லுங்கள். 42 ஆயிரம் ஏக்கரில் 20 ஆயிரம் ஏக்கருக்குத்தான் தண்ணீர் பாய்ச்சக் கூடியது. அதிலும் 15 ஆயிரம் ஏக்கர்தான் சிறுபோகம் செய்யலாம். இவ்வாறு நிலைமை உள்ளது. அதற்கு ஒரு மாற்றத்தைச் செய்துதாருங்கள் என்று கேட்டால் அதற்கு விடை இல்லை

போர் முடிந்த பின் வன்னிப் பகுதியில் 4 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் எவ்வாறு உயிர் வாழ்ந்தார்கள்? என்று கோட்டாபய ஆராய்ந்தார். பொருளாதாரத் தடை, எரிபொருள்கள் இல்லை, உணவு இல்லை, எந்தவிதமான பொருட்களும் வரவில்லை, இவ்வாறான நிலைமையில் அந்த மக்கள் எவ்வாறு உயிர் வாழ்ந்தார்கள் என்று கோட்டாபய தரப்பினர் ஆய்வு செய்தார்கள். அந்த ஆய்விலே அவர்கள் ஒன்றைப் புரிந்துகொண்டார்கள். அங்கு இருந்த குளங்களும் அந்தக் குளங்களைச் சூழ இருந்த பயிர்ச்செய்கைகளும் மக்களையும் போராட்டத்தையும் பாதுகாத்திருக்கின்றது என்ற முடிவுக்கு அவர்கள் வந்தார்கள்.

இவற்றை இல்லாது ஒழிக்க என்ன வழி? யாழ்ப்பாணத்துக்குத் தண்ணீர் கொண்டு செல்லுகின்ற ஒரு திட்டத்தை அவர்கள் உருவாக்கினார்கள். யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் இருப்பவர்கள் கணிசமானவர்கள் குடும்ப உறவுகள்தான். அவர்களை அடிபட வைக்க இதனை ஒரு பெரிய திட்டமாகக் கொண்டுவந்தார்கள். பின்னர் இரணைமடுவில் இருந்து குடிக்கத் தண்ணீர் தருகின்றார்கள் இல்லை என்று மாபெரும் பிரதேசவாதத்தைக் கோட்டாபய தரப்பினர் தரப்பினர் கொண்டு வந்தார்கள்

அப்போதுதான் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பல விரிவுரையாளர்கள் எங்களை அழைத்துப் பேசி இருந்தர்கள். எங்களுக்குப் பல விளக்கங்களைத் தந்திருந்தார்கள். இந்த அறிவைத் தந்ததே யாழ்ப்பாணம் பல்கழைக்கழகம் தான். அதுவரை எனக்குக்கூட அவ்வளவு விளக்கம் இருக்கவில்லை. விவசாயிகள் தங்களது கருத்துக்களை முன்வைத்தார்கள்

உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும் கிளிநொச்சியிலுள்ள பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை என்று? மாரிகாலத்திலும் கோடை காலத்திலும் இப்போதும் நீர்த்தாங்கிகளிலேயே நீர் விநியோகிக்கப்படுகின்றது. அங்குகூட இரணைமடுக் குளத்தில் இருந்து நீர் விநியோகிக்கப்படுவதில்லை. கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்லாறு போன்ற பகுதிகளில் குடிக்கத் தண்ணீர் இல்லை

கிளிநொச்சியில் குடிக்கத் தண்ணீர் இல்லை. விவசாயம் செய்யத் தண்ணீர் இல்லை. இந்நிலையில் யாழ்ப்பாணத்துக்குத் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டால் இங்கே ஒரு விரோதத்தைக் கட்டி வளர்க்கலாம் என்று அரசு திட்டமிட்டது. இதனால் மக்கள் சிலரிடம் இந்தக் கேள்வி இருக்கின்றது. நான்கூட யாருக்கும் தண்ணீர் தரமாட்டேன் என்று சொல்லவில்லை. நியாயத்தைச் சொன்னேன். திட்டமிட்ட வகையில் இனத்துக்குள் பிளவுகள் வரக்கூடிய வகையில் உருவாக்கப்பட்ட திட்டம்தான் இரணைமடு குடிநீர்த்திட்டம் – என்றார்.

# பொதுமக்கள் அனைவரும் நேரமொதுக்கி பொதுத்தேர்தலில் வாக்களிக்க வேண்டும்

## மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் வேண்டுகோள்

**(மட்டக்களப்பு நிருபர்)**

நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் பொதுமக்கள் எவ்வளவு கஷ்டம் இருந்தாலும் அனைவரும் நேரமொதுக்கி தமது ஜனநாயக உரிமையான வாக்களிப்பில் ஈடுபடவேண்டுமென மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் கலாநிதி பொன்னையா ஜோசப் மட்டக்களப்பு ஆயர் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டார். ஆயர் பொன்னையா ஜோசப் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

நான் அரசியல் சார்பற்றவன். எந்த அரசியல் கட்சிகளையும் சாராதவன். அரசியலுக்குப்பால் எல்லா மதங்களுக்கும் பொதுவாகவே சேவை புரிந்து வருகின்றேன். வாக்களிப்பது மனித உரிமை அது எமது கடமையுமாகும். சிறையிலிருப்பவர்களுக்கும் வாக்களிக்கும் உரிமையினை அரசு வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தவன் நான். மட்டக்களப்பு மாவட்டத்தில் பலர் சிரமத்தில் வாக்களிப்பதில்லை. பலரது வாக்குகள் நிராகரிக்கப்படுபவையாக ஆக்கப்படுகின்றன. இவற்றை நன்றாகக் கவனித்து வாக்களிக்க வேண்டும்.

பொதுமக்கள் நன்றாக சிந்தித்து பொருத்தமானவர்களை நீங்களே தெரிவு செய்யவேண்டும். எவ்வளவு கஷ்டமான வேலைகள் இருந்தாலும் நீங்கள் அனைவரும் கட்டாயம் நேரமொதுக்கி வாக்களிக்வேண்டும். நான் சிவில் சமுகத்தின் போசகராக செயற்பட்டு வருகின்றேன். இனவாதம், மதவாதம், மொழி வாதம் இருக்கக்கூடாது. அதனைத் தவிர்க்க வேண்டும். வேட்பாளர்கள் வன்முறைகளைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். இதனை ஊடகங்கள் மக்களிடையே கொண்டு செல்லவேண்டும்.– என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த சிவில் சமுக குழுவின் தலைவர் எஸ். மாமாங்கராஜா கூறியவை வருமாறு:–

கடந்த காலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாக்களிப்பு வீதம் மிகவும் குறைவாகவே காணப்பட்டது. கிராமப் புறங்களில் உள்ள மக்கள் வாக்களிப்பதில் காட்டும் ஆர்வத்தைப் போல் நகர் புறங்களில் வாழ்பவர்கள் வாக்களிப்பில் ஆர்வம் காட்டுவதில்லை. கடந்த யுத்தகாலம் வாக்களிப்பதில் விருப்பமின்மையை ஏற்படுத்தியிருக்கலாம்.

தற்பொழுது வாக்களிக்கச் சென்றால் கொரோனா தொற்று ஏற்படும் என வதந்தி பரப்பப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் எந்த ஒரு தனி நபரும் கொரோனா நோயினால் பாதிக்கப்படவில்லை. மட்டக்களப்பில் கொரோனா கண்டறியபட்ட ஒருவர் வெளிநாட்டில் இருந்து வந்தவர். அவரும் பூரண குணமடைந்து விட்டார். எனவே மக்கள் எவ்வித பயமோ, பீதியோ இன்றி அனைவரும் வாக்களிக்க வேண்டும். கடந்த காலத்தைவிட 80 தொடக்கம் 85 வீதம் வாக்களிக்க வேண்டும்.

மக்கள் ஜனநாயக உரிமையினைப் பயன்படுத்தி உங்களுக்கு விருப்பமான, பொருத்தமான, தகுதியான, நல்லவரைத் தெரிவு செய்யுங்கள். – என மாமாங்கராஜா பொதுமக்களைக் கேட்டுக்கொண்டார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் சிவில் சமுக குழுவின் உறுப்பினர் எஸ். தவபாலரட்னம் மற்றும் ஊடகவியலாளர்கள் பலரும் பிரசன்னமாயிருந்தார்.

# சிறுமியின் மீது துஷ்பிரயோகம் சந்தேக நபர் விளக்கமறியலில்

**திருகோணமலை, ஒக.01**

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பதினைந்து வயதுடைய சிறுமியொருவரை துஷ்பிரயோகத்திற்குட்படுத்தினார் எனக் கூறப்படும் சந்தே நபரை அடுத்த ஒகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மூதூர் நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

சின்னக்குளம், பள்ளிக்குடியிருப்பு, தோப்பூர், பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சந்தேக நபர் இத்திக்குளம் பகுதியிலுள்ள – பதினைந்து வயதுடைய – சிறுமியொருவரின் வீட்டுக்குச் சென்று அவர் தனிமையில் இருக்கும் போது துஷ்பிரயோகத்திற்குட்படுத்தியுள்ளார் எனத் தெரிவித்து சிறுமியின் பெற்றோர் சம்பூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். அதற்கமைய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்தனர்.



“

**அன்பான தாயக உறவுகளே!!**

ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை சர்வதேச அரங்கிற்கு எடுத்துச் சென்று, தமிழர் தரப்பு நியாயங்களை அவர்களுக்கு வலுவான ஆதாரங்களோடு எடுத்துரைத்து சர்வதேச நாடுகளின் ஆதரவை ஈழத்தமிழர்களிற்காக வென்றெடுப்பதில் பெரும் பங்காற்றியவர் சுமந்திரன்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், பிரித்தானிய, கனடிய, அவுஸ்திரேலிய மற்றும் பல நாடுகளின் வெளியுறவு அமைச்சுகள் என முக்கிய தளங்களில் ஈழத் தமிழர் பிரச்சினைகளை முன்னிறுத்திப் பல முக்கிய தீர்மானங்களை தமிழர் தரப்புக்குச் சாதகமாக நிறைவேற்றியதில் வெற்றி கண்டவர் சுமந்திரன்.

இச் செயற்பாடுகளில் சுமந்திரன் புலம்பெயர் தேசங்களில் உள்ள மனித உரிமை மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்களையும் இணைத்து அர்ப்பணிப்போடு செயற்பட்டார்.

மிகவும் இக்கட்டான காலகட்டத்தை எதிர்நோக்கியுள்ள ஈழத் தமிழர்களது அரசியல் தீர்வுக்காக ஆற்றல் படைத்த சுமந்திரனுடன் இணைந்து பணியாற்ற கனடியச் செயற்பாட்டாளர்களாகிய நாம் காத்து நிற்கின்றோம்.

எனவே, செயற்திறன் மிக்க சுமந்திரனிற்கு இத் தேர்தலில் பேராதரவு தருமாறு உங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

”

**கனடிய தமிழர் மனித உரிமை,**
**அரசியல் செயற்பாட்டாளர்கள்**

# எம்.ஏ.சுமந்திரன்

அடையாளம் | அறிவாற்றல் | அபிவிருத்தி



X 1

## பாராளுமன்றத் தேர்தல் - 2020

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்



2 10

கனகரட்ணம்
# சுகாஷ்
(சட்டத்தரணி)

1

இரு தேசங்கள்..!
ஒரு நாடு..!

- 2003: யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவத் தலைவன்.
- 2005: யாழ் பல்கலைக் கழகச் சட்ட மாணவர் சங்கத்தின் முதலாவது தலைவன்.
- வித்தியா படுகொலை, ரெஜினா படுகொலை போன்ற நூற்றுக்கும் அதிகமான வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்களுக்காக முதன் முதலில் களமிறங்கியவன்.
- பயங்கரவாதத் தடைச் சட்ட வழக்குகளில் சிக்கிய அப்பாவிகளுக்காகவும், கல்லுண்டாய் சூழல்மாசடைதல், சுன்னாகம் கழிவு ஒயில் பிரச்சனைகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும் கட்டணமின்றிக் களமிறங்கியவன்
- முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப் பிள்ளையார் கோயிலில் பௌத்த பிக்குவின் உடலை எரிக்க முற்பட்டபோது சட்டப் போராட்டத்தைக் கையில் எடுத்தவன்.
- ஈழத் தமிழருக்கு நீதிகேட்டு ஐக்கிய நாடுகள் சபையில் தொடர்ச்சியாகக் குரல் கொடுப்பவன்
- காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகளின் விடுதலை, இராணுவத்தின் வசமுள்ள பொது மக்களின் காணிகளை விடுவித்தல் போன்றவற்றிற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும் ஜனநாயகப் போராட்டக் களங்களிலும் முன்னின்று செயற்படுபவன்.
- சன நெருக்கடி மிகுந்த பிரதேசங்களான கோப்பாய், மாதகல், வட்டுக்கோட்டை போன்ற பகுதிகளில் கொரோனாத் தடுப்பு மையங்களை உருவாக்கி இராணுவத்தை தனிமைப்படுத்த முற்பட்டபோது அவற்றைத் தடுத்து நிறுத்தியவன்.
- சுழிபுரத்தில் மீனவர்களின் வாடி அமைந்துள்ள கரையோரக் காணிகளை கடற்படையினர் ஆக்கிரமிக்க முற்பட்டபோது தடுத்து நிறுத்தியவன்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி / அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

## தமிழ் மக்களின் ஜனநாயகப் போராட்டக் களங்களில்



## தமிழரின் உரிமைக்காக ஐக்கிய நாடுகள் சபையில்






X 1 2 10

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.08.2020 இல் வெளியிடப்பெற்றது.